

தமிழ் முரசு
அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்
வெலிக்கடை வடுக்கள்
விடுதலையின் விழுப்புண்கள்
ஆண்டு
சிறப்பிதழ்
TAMIL MOURASSOU
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
இறுதி வெற்றிவரை போராடும்




## எங்கே போகிறோம்...?

'தமிழ்முரசு' தனது பாதையில் ஐந்து வருடங்களைக் கடந்து ஆறாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கிறது. ஆறாவது ஆண்டின் இந்த முதலாவது இதழ் வெளிவருகின்ற நேரம் 'நாம் இதுவரை கடந்து வந்த தூரத்தைவிட இனிமேல் கடக்க வேண்டிய பாதை கடினமானது... கரடுமுரடானது' என்ற யதார்த்தத்தை நிரூபிப்பதாகவே உள்ளது.

ஈழப்போராட்டம் என்பது வெறும் மந்திரத்தில் மாங்காய் பறிக்கும் வித்தையோ, அல்லது ஆயுத சாகச விளையாட்டோ அல்ல அது கடினமானது... நீளமானது என்ற உண்மை பலரது செவிகளில் எத்தனைதரம் கூறியபோதும் ஏறமறுத்தது. ஆனால் இன்று நிலைமை என்ன? ஒருபுறத்தில் நமது பொது எதிரியான சிறிலங்கா நவபாசிச அரசு இராணுவ அடக்குமுறை மூலம் எம்மை அடிமைப் படுத்திவிடலாம் என்ற முயற்சியிலே தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. [illegible] அமைதியைக் குலைக்கும் வகையிலே அரசகுண்டர்கள் வேட்டையாட்டம், மன்னார் - அடம்பனிலே எமது அப்பாவிமக்கள் 60பேர் அரச குண்டர்களுக்குப் பலி, [illegible] கைது செய்யப்பட்ட 50பேர் நிலை தெரியவில்லை, யாழ்ப்பாணத்திலே 'ஷெல்'அடிப்பு அக்கிரமம், மூதூரிலே 300க்கும் மேற்பட்ட பெண்கள் கைது - பலர் [illegible], மட்டக்களப்பிலே, வவுனியாவிலே பலர் கைது - பலர் பலி, திருகோணமலையை தம்வசமாக்க [illegible] வெறி

யேற்றப்படல் ... இப்பொழுதே சிறீலங்கா அரசின் இரத்தவெறி பிடித்த இராணுவக்கரம் தீவிரமாக நீள்கிறது.

மறுபுறமாக இந்திய தேசிய முதலாளித்துவ அரசு மெல்ல மெல்ல தன் சுயரூபத்தைக் காட்டிவரும் செயல். உடன்பாடற்ற தீர்வு முறையை ஏற்றுக்கொள்ளுங்கள் இல்லையேல் உங்கள் கதி இது தான் எச்சரிக்கும் வகையிலான விடுதலை இயக்கத் தலைவர்களின் கைதுகளும் விடுவிப்புகளும்.

இந்த இரு அபாயங்களையும் எமது உறுதியான போராட்ட முன்னெடுப்புக்களின் மூலம் தடுக்கலாம். ஆனால் இன்று புதிதாக ஈழப் போராட்டத்தை புதைகுழிக்கு அனுப்ப முயலும் பிரயத்தனமாக வந்திருக்கும் சில இயக்கங்களிருக்கின்றன! பிற்போக்குசக்திகளின் உள்நுழைவு வலை முறியடிப்பது எப்படி? போராட்டத்தை தமது சுய இலாபங்களுக்காகப் பாவிக்க விரும்பும் இந்த பிற்போக்கு சக்திகளின் பின்பலத்துடன் இவற்றின் சுயரூபத்தை விளங்கிக்கொள்ளாத இயக்கம் ஒன்று கைகோர்த்து நிற்பதுடன் முற்போக்கு இயக்கங்களை வேரறுக்கும் திட்டமிட்ட சதிகள், சேறடிப்புப் பிரச்சாரங்கள் ஆகியவற்றைப் பாரிய அளவில் முடுக்கிவிட்டுள்ளது. அதுமாத்திரமன்றி ஒரு இயக்கத்தை ஏற்கனவே தமது பாசிச நடவடிக்கைக்கு உட்படுத்தியதுபோல இதர இயக்கங்கள் மீதும் தாக்குதல் முயற்சி, ஐரோப்பாவில் இதர இயக்கங்களுக்கான ஆதரவுப்பணிகளில் ஈடுபடுவோர் மீது வன்முறைப் பிரயோகங்கள் .... ஈழப்போராட்டத்தை எப்படியாவது நீண்ட இழு வேட்டை அழப்புதைப்பதற்குத்தான் இந்த செயற்பாடுகள் வழிவகுக்கப் போகின்றன என்பதை மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

www.tamilarangam.net



# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியி

## உறுதியான காலடிகள்

ஈழவிடுதலைப் போராட்டம் இதுவரைகாலமும் நமக்கு ஏராளமான பாடங்களைக் கற்றுத்தந்திருக்கிறது. காலாகாலமாக ஈழப் போராட்டத்தை புதுவழியில் முன்னெடுக்க முயன்ற புரட்சிகரச்சக்திகளுக்கெதிராக தம்முயற்சியில் சற்றும் தளர்ந்துவிடாத முதலாளித்துவம் தனது சிஷ்யப்பிள்ளைகளான குட்டி முதலதளித்துவத்தினதும் பிற்போக்குச் சக்திகளதும் துணையுடன் மீண்டும் வசைபா[illegible] ஆரம்பித்துள்ளது. இதன் விளைவுதான் ஈழப் போராட்டத்தின் புரட்சிகர அத்தியாயங்களை எழுதிக்கொண்டிருக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கெதிரான இன்றைய புதிய சேறடிப்புக்கள். தவறுகளைச் செய்துகொண்டு அல்லது தவறுகளோடு எம்மைத் தொடர்புபடுத்திவிட்டு 'ஐயோ, மக்களே! இங்கே பாருங்கள், ஏகாதிபத்திய முதலாளித்துவங்களின் கைக்கூலிகளின் கைக்கூலிகள் எமது போராட்ட முன்னெடுப்புக்களை விரும்பாமல் வேண்டுமென்றே எம்மை சதி செய்து பிரச்சனைகளில் மாட்டி விடுகிறார்கள். நாங்கள் சத்தியமானவர்கள், உன்னதமானவர்கள் என்று அழுது புலம்பும் ஆதிக்கப் பரம்பரையிலிருந்து வரவில்லை.

மாறாக நாம் எமது தவறுகளை மக்களிடம் ஒப்புக்கொள்கிறோம். மக்களிடமிருந்து நாம் வேறுபட்டவர்கள்ல்ல. போராளிகள் வானத்திலிருந்து குதித்தவர்களல்ல. எமது சமூகத்தின் வர்க்கக்குணம்சப் பாதிப்புக்கு அவர்களும் உட்பட்டவர்களே என போராளிகள் விடும் தவறுகட்கான காரணங்கள் மக்களிடம் விளக்கப்படுகிறது. இத்தவறுகள் திருத்தப்படாது தொடரும்பட்சத்தில் மக்கள் மத்தியிலே தண்டனை வழங்கப்படுகிறது. இந்த வளர்ச்சி நிலையை சீரணிக்கமுடியாத பிற்போக்குச் சக்திகள்....எங்கே போராளிகளை 'ஹீரோக்களாகவும் ரம்போ'களாகவும் முன்னணியில் காட்டி பின்னணியில் தங்கள் வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டுபோகும் இன்றைய சுகவாழ்விற்கு அஸ்தமனகாலம் வந்துவிடுமோ என்ற அச்சம் சூழ அள்ளி இறைக்கிறார்கள் சேறை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனிக்கெதிராக.

www.tamilarangam.net



ஈழப் போராட்டத்தில் காலடிகளை உறுதியாக முன்னெடுத்து வைத்துவரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு இவை புதியவை அல்ல. இந்த சேறடிப்புகளும், வசைபாடல்களும் முன்னணியின் ஆரம்பகாலம் தொட்டே தொடர்கின்றன. இவற்றைக் கண்டு நாம் கலங்கவில்லை. கட்சியை மேலும் பலப்படுத்துகிறோம். எமது அடுத்த நடவடிக்கைகளை உறுதியானதாக எடுக்கிறோம். இதன் ஒரு அம்சம்தான் அண்மையில் தமிழ்நாட்டில் பிற்போக்குச் சக்திகளின் பிற்பலத்துடன் தமிழ்நாட்டு பொலிசார் சிறீலங்கா பொலிசாருக்கு தாம் எந்த வகையிலும் குறைந்தவர்களில்லை என்பதை காட்ட எடுத்த முயற்சி

EPRLF இன் வளர்ச்சியை சீரணிக்க முடியாத ஒரு கூட்டமும், ஈழப்போராட்டத்திற்கு இன்று சர்வதேச அரங்கிலும், இந்தியாவிலும் கிடைத்துவரும் வசதிகளையும் வாய்ப்புக்களையும் தமது சொந்த நலனுக்காகப் பாவித்து இன்று போதைவஸ்த்துக் கடத்தல் சாம்ராச்சியம் ஒன்றை கட்டியமைத்துவரும் இன்னொரு கூட்டமும் இந்த தமிழக பொலிசாருக்கு பிற்பலமாக இருந்ததுடன் மாத்திரமன்றி சென்னை சூளைமேட்டில் இலங்கையைச் சேர்ந்த போதைவஸ்த்துக் கடத்தல்காரன் முருகேசதாஸ் 'வியாபாரம்' செய்த போது அப்பகுதி மக்களோடு கைகலப்பு ஏற்பட்டதையும் நிலைமையை சுமுகமாக்கச் சென்ற EPRLF தோழர்கள் இருவர் முருகேசதாஸின் அடியாட்களால் தாக்கப்பட்டதையும் மறைத்துவிட்டு ஏன் போதைவஸ்த்து என்ற சொல்லையே ஒளித்துவிட்டு EPRLF தமிழகத்தில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டார்கள் என்று குமுறத்தொடங்கினார்கள். இந்தக் குமுறல்களும், தமிழகப் பொலிசாரின் அத்துமீறிய நடவடிக்கைகளும் மீண்டும் ஈழப் போராட்ட வரலாற்றின் சரியான திசைவழியில் உறுதியான எமது அடுத்த காலடிகளை எடுத்து வைக்கத் தூண்டியுள்ளது.

அடக்குமுறை எந்த உருவில் வந்தாலும் நாம் எதிர்ப்போம். காக்கிச் சட்டை அணிந்தவர்கள் அவர்கள் எந்த மொழி பேசுபவர்களாக இருந்தாலும் அராஜகம் அவர்களது பொது மொழியாக மாறின் நாம் குனிந்து நின்று அவர்களிடம் மண்டியிட்டு சரணாகதியடைய மாட்டோம். அல்லது அரசியல்

www.tamilarangam.net



வாதிகளின் வீட்டுயின் கதவுகளைத் தட்டி அவர்களுடன் காவல் நிலையங்களில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தமாட்டோம். நிமிர்ந்து நிற்போம். உறுதியாக எதிர்த்து நிற்போம் என்பதை நிரூபிக்கும் வகையில்......தமிழக பொலிசாரின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்கும் .... அவர்களுக்குப் பிற்பலமாகவுள்ள பிற்போக்குச் சக்திகளை அம்பலப்படுத்தும் வகையிலும் சென்னையிலுள்ள எமது ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலைய அலுவலகத்தை ஒரு மாதத்துக்கு மூடியுள்ளோம். இத்தகைய பிற்போக்குத்தனமான நடவடிக்கைகள் தொடருமாயின் எமது அலுவலகம் முற்றாகவே தமிழகத்தில் மூடப்படும். எமது தேசத்தின் சுதந்திரத்துக்காக போராட்டம் நடத்தும் நாம் எமது சுதந்திரத்தை அடகுவைத்து யாரிடமும் சரணாகதியடையப் போவதில்லை.

அன்று அமிர்தலிங்கம் ஐயா முதல் இன்று சில இயக்கங்களின் முகவர்களாக முழுநேர EPRLF எதிர்ப்பு வசைபாடிகளாக செயற்பட்டுவரும் ஒரு சிலர்வரை எத்தனை தான் சேற்றை வாரியிறைத்தாலும்..... வசைபாடினாலும் நேசமிகு ஈழ மக்களின் ஆதரவுடன் எமது பாசமிகு ஈழதேசத்தை மீட்கும் போர் தொடரும். ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் வரலாற்றுப் பங்களிப்பு வளரும். ஏனெனில் நாம் முடிவை நோக்கிப் போராடுபவர்களல்ல. நாம் போராடுவது விடிவை நோக்கியே. எனவே மக்களே மீண்டும் மீண்டும் இந்த ஒலிம் வேதங்கள் கண்டு சஞ்சலப்பட்டு ஈழப்போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு விலகிவிடாமல் போராட்ட நீரோட்டத்தோடு இணைந்து போராளிகளின் கரங்களைப் பலப்படுத்துங்கள். இல்லையேல் ஈழப் போராட்டம் தீய மற்றும் பிற்போக்குச் சக்திகளின் ஆதிக்கங்களில் சிக்கிச் சீரழிவது தவிர்க்கமுடியாது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

********** ------------ *********** ------------ ******

தோழர்களே!

EPIC தரும் ஈழச் செய்தியின் தொலைபேசி மூலம் அறிய நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 48-74-60-43.

www.tamilarangam.net



# ஈழ, தமிழக, சிறீலங்கா செய்திகள்

## "சுயாட்சி யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கான முன்நிபந்தனையாக ஆயுதங்களைக் கீழே வைக்கமுடியாது". —ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி அறிவிப்பு!

'சமாதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன் நிபந்தனையாகவோ அன்றி பேச்சுவார்த்தைகட்கான முனநிபந்தனையாகவோ, ஆயுதங்களைக் கீழே வைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை' இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலதிபர் தோழர் பத்மநாபா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்........'சிறீலங்கா அரசாங்கம் இராணுவத் தீர்வில் நாட்டங்கொண்டிருக்கும் வரை தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை நாடியதற்கான அடிப்படைக் காரணிகள் நிலைத்திருக்கும் வரை ஆயுதப் போராட்டம் தொடரும் எனக் கூறியதுடன் இலங்கை மக்கள் (ஈழமக்களும், சிங்களச் சகோதரர்களும்) அமைதியாக வாழ்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்படும் வரை ஆயுதப் போராட்டம் தொடர்பான தங்களின் உறுதி நிலைக்குமெனவும் தெரிவித்துள்ளார். மேலும் தோழர் பத்மநாபா 'எங்கள் மக்கள் சமாதானத்திற்காகவே இருக்கின்றனர்கள். அடிமைத்தனமான சமாதானத்தை திட்டவட்டமாக நிராகரிக்கிறர்கள்' என்று கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வொன்றைக் காண்பது தொடர்பாக இந்தியா எடுத்துவரும் சகல முயற்சிகளையும் மலினப்படுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் முயல்கிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிலைநிறுத்தவே அமெரிக்க ஏகாதிபத்தியம் நாட்டங்கொண்டுள்ளது என பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கை அரசின் போராட்டத்திற்கு உதவ தயாராகியிருப்பதான அமெரிக்க இராஜாங்க அமைச்சின் அறிக்கை தொடர்பாக தோழர் பத்மநாபா கருத்துத் தெரிவித்துள்ளார்.

## பொருளாதாரம் புதை குழியை நோக்கி......... சிறீலங்கா வரவுசெலவுத் திட்டம் சாட்சி.

இம்மாதம் 12 ம் திகதி சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஐ.தே.க. அரசின் 0-வது வரவு செலவுத் திட்டம் சிறீலங்கா ஒரு மீளமுடியாத பொருளாதாரப் புதைகுழிகளுள் தாழத் தொடங்கிவிட்டதைக் காட்டும் ஒரு சிறந்த சாட்சியாகும். இலங்கையின் வரலாற்றிலே எக்காலத்திலும் இல்லாத அதிக தொகையான 3000 கோடி ரூபா துண்டு விழுகிறது. இந்தத் தொகையில் 600 கோடி ரூபாவை மாத்திரம் சர்வதேச நாணயசபை வழங்குகிறது. மீதியைத் திரட்ட சிறீலங்கா நிதியமைச்சர் றொனி டிமெல் பிச்சைப் பாத்திரத்துடன் உலகவலம் புறப்பட்டுவிட்டார். வழக்கம் போலவே இம்முறையும் பாதுகாப்புச் செலவினங்கள் என்ற பெயரில் அப்பாவி ஈழமக்கள் மீதான இனக்கொலைக்கு மிக அதிக தொகை 1500 கோடி ரூபா – கடந்த வருடம் இது 1000 கோடி ரூபா – ஒதுக்கப்பட்டுள்ளது. வரவுசெலவுத் திட்ட சமாளிப்புக்காக கல்வி, சுகாதாரம், அபிவிருத்தி உட்பட சிறீலங்கா மக்களின் சமூகநலச் செலவீடுகளில் பாரிய வெட்டுக்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. சிறீலங்காவிற்கு உதவும் நாடுகள் பல இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசு கையாளும் இராணுவத் தீர்வைக் கண்டித்து தமது உதவிகளை நிறுத்தப்போவதாக – குறைக்கப் போவதாக எச்சரித்துள்ளன. ஏராளமான சுரண்டல் கனவுகளுடன் சிறீலங்காவில் கமக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாட்டைவிட்டு வெளிக்கிட ஆரம்பித்துவிட்டன. உலகச் சந்தையில் தொடரும் தேயிலையின் விலைக்குறைவு, உல்லாசப் பிரயாணிகள் வருகையில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சி, பல உற்பத்தி நிறுவனங்கள் மூடப்படும் நிலை ஆகியன எல்லாம் ஒன்றாய் சேர்ந்து சிறீலங்கா அரசுக்கு மரணவலியைத் தர ஆரம்பித்து விட்டன.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு எதிராக பிற்போக்குச் சக்திகளின் கரங்கள் நீள்கின்றன:

புரட்சிகர சக்திகளை அழிக்கவேண்டும், ஈழப்போராட்டத்தில் ஏக போக ஆதிக்கம் செலுத்தவேண்டும். என்ற நோக்கங்களைக் கொண்டுள்ள பிற்போக்குச் சக்திகள் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கெதிரான தமது சதிகளைத் தொடர்ச்சியாக கட்டவிழ்த்து வருகின்றன. இந்த தொடர் சதிகளின் ஒரு அம்சமாக சமீபத்தில் தமிழகத்தில் எமது தோழர்கள் தங்கியிருந்த இல்லம் இந்த பிற்போக்கு சக்திகளின் கைக்கூலிகளால் தாக்கப்பட்டு, எமது தோழர் களும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இந்தக் கைக்கூலிகளின் தாக்குதல்கள் எல்லை மீறவே தமது உயிரைக் காப்பாற்ற துப்பாக்கிப்பிரயோகம் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமது தோழர்களுக்கு ஏற்பட்டது. இச்சம்பவத்தில் தமிழகப்பிரஜை ஒருவர் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்தனர். இது தொடர்பாக EPRLF இன் செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா விடுத்துள்ள அறிக்கையில் 'நடைபெற்ற சம்பவம் குறித்து தமிழக மக்களிடம் EPRLF பொதுமன்னிப்புக் கோருவதாகவும் சம்பவம் தொடர்பான விசாரணைகளை இந்தியச் சட்டங்களுக்கமைய மேற்கொள்ள தமிழக பொலிசாருக்கு பூரண ஆதரவு வழங்குமென்றும் கூறியுள்ளதுடன் மேற் படி துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பான விசாரணைகளை முன்னணி நடத்தி இயக்கத்தோழர்கள் தவறிழைத்ததாகக் காணப்படின் அவர்கள் இயக்கத்தி லிருந்து விலக்கப்பட்டு தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள்' என்றும் கூறியுள் ளார்.

நிலைமை இப்படியிருக்க பொய்யான செய்திகளைக் கொண்டே பிழைப்பு நடத்தும் சில பிற்போக்குச் சக்திகள் சிறீலங்கா அரசைவிட மிகுந்த குதூகலத்தோடு EPRLF மீது வழமையான தமது சேறடிப்புகளை வெகு தாராளமா கவே நடத்தத்தொடங்கியுள்ளன.

## தமிழக அமைச்சரவையிலிருந்து 11 அமைச்சர்கள் பதவிநீக்கம்!

உட்கட்சிப் பூசல்களாலும், குழுப்பிரிவுகளாலும் சிதறிப் போய்க்கொண்டிருக் கும் தமிழகத்தின் ஆளும் அ.தி.மு.க அமைச்சரவையிலிருந்து 11 அமைச்சர்களை தமிழக முதலவர் திரு. எம்.ஜி.ராமச்சந்திரன் பதவியிலிருந்து நீக்கியுள்ளார். பதவி நீக்கப்பட்டவர்களில் வீரப்பன், காளிமுத்து, கோவிந்தன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அதே சமயம் முன்னாள் அமைச்சர் கிருஷ்ண சுவாமிக்கு மீண்டும் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அமைச்சரவையிலும் மாற் றங்கள் செய்யப்பட்டுள்ளன. அமைச்சரவையிலிருந்து அருண்நேரு பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு அமைச்சர் சிதம்பரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net



## பேச்சுவார்த்தை நாடகங்கள் வெறும் வெற்று வேட்டுக்களே!

## சிறீலங்கா அரசு உலகை ஏமாற்றுகிறது.

காலத்துக்குக் காலம் உலகநாடுகளிடையே கடன் வாங்குவதற்கு கையாளுகின்ற ஒரு தந்திரமாக பேச்சுவார்த்தையை சிறீலங்கா அரசு பயன்படுத்தி வருவதை உலகநாடுகள் உணரத் தொடங்கிவிட்டன. சமாதானத் தீர்வு பற்றி பெரிதாக பிதற்றி வந்த சிறீலங்கா அரசு தற்போது மீண்டும் இராணுவத்தீர்வு என்ற போர்முரசை இறுக்கி அறைய ஆரம்பித்துள்ளது. சிறீலங்கா ஜனாதிபதி ஜெயவர்தன அவனது பாதுகாப்பமைச்சர் அத்துலத் முதலி ஆகியோர் தற்போது அடிக்கடி இராணுவத்தீர்வு உச்சாடனங்களில் இறங்கியுள்ளனர். இம்மாதம் சமர்ப்பிக்கப் படவிருக்கும் வரவு செலவுத்திட்டத்தில் மாவட்டசபைகளுக்காக ஒரு சதம் கூட நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 'ஈழம்' என்ற சொல்கூட அகராதியில் இல்லாதவாறு செய்து விட்டே மாவட்டசபையை வழங்குவோம் என்று சிறிலங்கா காணி-விவசாய அமைச்சர் பிதற்றியுள்ளான். இப்படி ஏமாற்று நாடகங்களின் ஒட்டுமொத்தச் சொந்தக்காரர்களின் சதிகளுக்கு நாம் பலியாகாமல் ஈழப்போராட்டத்தில் உறுதியாக நிற்போம்.

## காரணமற்ற கைது! மலையகத்தில் கிளர்ச்சி!

## வடக்கில் அது தொடர்ச்சி!

பயங்கரவாதத் தடைச்சட்டம் எனும் சிறீலங்கா அரசின் கோரக்கரங்கள் இப்போது தங்குதடையின்றி மலையகத்திலும் பரவ ஆரம்பித்து விட்டன. இழப்பதற்கு எதுவுமே இல்லாத நிலையிலிருக்கும் அப்பாவி மலையக மக்களுக்கெதிரான கூட்டுத்தாக்குதல்களில் சிறீலங்கா அரசின் கூலிப்படைகளும், குண்டர்படைகளும் மிகத்தீவிரமாக இறங்கியுள்ளன. காரணமின்றி கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மலையகத்தில் பணபுரியும் ஆசிரியையை விடுதலை செய்யக் கோரி மலையக மாணவர்கள் தொடர்ச்சியான பாடசாலைப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளார்கள். மலையக மாணவர்களின் இந்த எழுச்சிப்போராட்டத்துக்கு ஆதரவான கிளர்ச்சிப் போராட்டங்கள் ஈழதேசமெங்கும் எழுந்துள்ளன. மாணவர்களின் இப்போராட்டங்களுக்காதரவாக தோட்டத் தொழிலாளர்களும் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

அதேசமயம் இராகலை சந்திரகாந்தித் தோட்டத்தில் தொழிலாளி ஒருவரின் அர்த்தமற்ற கைதுக்கெதிராக வீதித்தடைகள் போட்டு கிளர்ந்தெழுந்த தொழிலாளர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை ஆட்சேபித்து 500 மேற்பட்ட தோட்டத்தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். தோட்டங்களிடையே கூலிப்படைமுகாம்கள், தொழிலாளர்கள் மீது குண்டர்களின் தாக்குதல், வயல்காருக்கு தீவைப்பு என்பெறலாம் அரசபயங்கரவாதம் நனது கோரக்கரங்களால் அப்பாவிமலையக மக்களின் குரல்வளைகளை நசிக்க முயல்கையிலும் கூட அவர்களது வீரமிக்க போராட்டங்கள் தொடர்கின்றன.

www.tamilarangam.net



## அரசபயங்கரவாதம் தொடர்கிறது ............

சமாதானத் தீர்வு என்றமுகமூடியைப் போட்டுக்கொண்டு சிறீலங்கா நவபாசிச அரசு தங்குதடையின்றி தனது அரசபயங்கரவாதத்தை அப்பாவி ஈழ மக்களின் மீது கட்டவிழ்த்து வருகிறது. சமீபத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ்-கோட்டை ஷெல் தாக்குதல்கள் பாடசாலை மாணவர்கள், அப்பாவிப் பொதுமக்கள் ஆகியோரை தொடர்ந்தும் பலிவாங்கிவருவதுடன் பலரைப் படுகா யப்படுத்தி, ஆஸ்பத்திரி, பாடசாலைகள், மற்றும் முக்கிய கட்டடங்கள் ஆகியவற்றை சேதப்படுத்தி வருகின்றன. மன்னாரில் நடைபெற்ற இராணுவ வெறியாட்டம் அப்பாவிப் பொதுமக்கள் பலரைப் பலிவாங்கியுள்ளது. இப்படுகொலைகளின் போது அடம்பனிலுள்ள ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 7 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர். திருமலைப் பிரதேசத் தில் தொடர்ந்தும் விமானத்தாக்குதல், பீரங்கிப் படகுகளிலிருந்து 'ஷெல்' தாக்குதல் கள், வீடுகள் கோயில்கள் தாக்கப்படல், அப்பாவி ஈழமக்கள் கொல்லப்படல் ஆகியன தொடர்கின்றன. எஞ்சியிருக்கும் ஒரு சில கிராமங்களிலிருந்தும் அப்பாவி ஈழமக்கள் கூலிப்படையாலும், குண்டர்களாலும் அகதிகளாக அடித்துவிரட்டப்பட்டுவருகின்றனர். மட்டுநகர் பகுதியில் விஷேட பொலிஸ் கொமாண்டோ படையின் பயங்கரவாதம் கோரத்தாண்டவமாடுகிறது. ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கைது செய்தல் அவர்களைக் கொல்லுதல், பெண்களை மானபங்கப்படுத்தல் என்றெல்லாம் இவர்களது வெறியாட்டம் தொடர்கிறது. வவுனியா பிரதேசம் ஆயிரத்திற்கு மேற்பட்ட கூலிப்படை களால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டை என்ற பெயரில் கோரத்தனங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு பல நூறு அப்பாவிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## விடுதலைப் புலிகளின் தளபதி விக்டர் வீரமரணம்:

அடம்பனில் சிறீலங்கா கூலிப்படையினருடன் நேரமுடன் போராடி விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளரும், தளபதியுமான விக்டரும், சக லெப்டினண்ட் றேமும் வீரமரணம் அடைந்தனர். இத்தாக்குதலில் கூலிப்படை யினர் பலர் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. வீரமரணமடைந்த விக்டருக்கும் றேமுக்கும் யாழ்-பிரதேச மக்கள் கதவடைப்பு, ஹர்த்தால் மூலமும் இறுதிவைப வத்தில் பெருமளவில் கலந்துகொண்டும் தங்கள் கண்ணீர் அஞ்சலியைத் தெரி வித்தனர். இவ்வீரமரணங்கள் குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி யும் தனது அஞ்சலிகளைச் செலுத்தியுள்ளது. EPRLF இன் அஞ்சலிச் செய்தியில் "ஈழமக்களின் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்து போராடி வீரமரணமடைந்த விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் விக்டர், றேம் ஆகியோரது இழப்பினால் துயருற்றிருக்கும் புலிகள் இயக்க போராளிகளிற்கு எமது ஆறுதல் செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களின் துயரில் நாமும் பங்குகொள் கிறோம். வீரமரணமடைந்த போராளிகளுக்கு எமது வீரவணக்கங்கள்" எனக் குறிப் பிடப்பட்டுள்ளது. மேற்படி தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகளால் கொல்லப் பட்ட 9 இராணுவத்தினரின் உடல்களை புலிகள் இராணுவத்தினரிடம் கையளித்த தும் மேலும் இரு இராணுவத்தினரை கைப்பற்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஈழவிடுதலை இயக்கங்களுக்கு எதிராக தமிழக பொலிசார் நடவடிக்கை! போரும் தொடர்கிறது!

ஈழவிடுதலை இயக்கங்கள் மீது நாம் காட்டும் ஆதிக்கத்தை நிறுவிக்கவும், பெருங்குருநகர் விஜயம் செய்யும் அதிஉத்தமர் ஜெயவர்த்தனாவை திருப்திப்படுத்தவும் கிளர்ந்தெழும் போராட்ட தமது தேசாபிமான கூட்டுணர்வை வெறுப்படுத்தவும் இந்திய அரசின் அனுசரணையுடன் ஈழவிடுதலை இயக்கங்களின் சில தலைவர்களையும், உறுப்பினர்களையும் கைது செய்த தமிழக பொலிசார் பின்னர் விடுதலை செய்துள்ளனர். அதேசமயம் இயக்க முகாம்களிலிருந்து சில ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். கடந்த சில நாட்களாக EPRLF மீது தமிழக பொலிசாரின் அடக்குமுறைகள் பிற்போக்கு சக்திகளின் பின்பலத்துடன் பட்டபோது சில சக்திகள் எள்ளிநகையாடின. தமிழக பொலிசாரை விடுதலைக்கு உதவும் வீரர்களாகவும், அதி உன்னதமானவர்களாகவும் பிரகடனம் செய்த இந்த சக்திகள் அவர்களுடன் இணைந்து EPRLF க்கெதிரான சதிகளிலும், சேறடிப்புகளிலும் தீவிரமாக இறங்கின. அப்போது நாம் பலதடவைகள் எமது உண்மைநிலையையும், தமிழக பொலிசாரின் சுயரூபத்தையும், பிற்போக்கு சக்திகளுக்கெதிரான அவர்களது நடத்தை வரலாற்றையும் விளக்கினோம். இன்று எமக்கு ஏற்பட்ட நிலை நாளை உங்களுக்கும் ஏற்படும் எனவும் எச்சரித்தோம். எமது கூற்றுக்களை ஏற்காதவர்கள் இன்று தமக்கும் இந்த நிலை ஏற்பட்டவுடன் அழுது புலம்புவதும், தமிழக பொலிசாரை புதியநோக்கில் விமர்சிப்பதும் விந்தையானது. எனினும் ஈழப்போராட்டம் உண்மையான, சகல அடக்குமுறைகளையும் இன்று எதிர்கொள்ளும் இத்தகையதொரு காலகட்டத்தில் எமது எதிரிகளுக்கு எதிராக அனைத்து சக்திகளும் ஒன்றுபடட்டும். இல்லையேல் ஸ்ரீலங்கா மீதுள்ள நாற்றும் குறையாத இந்திய விரட்டலுக்கு உள்ளாகும் நிலைக்கு அனைவருமே உள்ளாவோம்.

www.tamilarangam.net






"அங்கிள், எனக்கு இந்த நாட்டிலே இருக்கவே விருப்பமில்லை. எப்படியென்டாலும் உடனே சிலோனுக்குப் போக வேண்டும்போல இருக்கு' என்றான் கண்ணன். கண்ணனுக்கு வயது பத்துப் பன்னிரண்டு இருக்கும். எனது நண்பன் தேவாவின் அண்ணன் மகன் தேவாவிற்கும் எனக்குமுள்ள நட்பின் காரணமாக எனக்கும் என் மனைவிக்கும் பரிச்சயமானவன். சமீபத்தில் இலங்கையிலிருந்து பிரான்சுக்கு வந்தவன்.

"ஏன் கண்ணு அப்படிச் சொல்லுகிறாய்? எல்லோரும் பிரான்சு பிரான்சு என்று ஓடி வரேக்கை உனக்கு மட்டும் ஏன் இந்த நாடு வெறுத்துப்போச்சு? சொக்கிளேற்றா..., அப்பிளா.. வீடியோவா.. ரெலிவிசனா.. விரும்பின சாப்பாடு தான் இல்லையா.. விதம்விதமான உடுப்பா நீ கேட்டபோதெல்லாம் அப்பா, அம்மா வாங்கித் தருகினமே, பிறகென்ன பிரான்சில் வெறுப்பு உனக்கு...... என்னை முந்திக்கொண்டு என் மனைவி கண்ணனைக் கேட்கிறாள். நானும் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்திலிருந்து கண்ணை விலக்கி கண்ணன் சொல்லப்போகும் பதிலைக் கேட்கத் தயாரானேன். "ஐஸ்கிறீமும், சொக்கிளேட்டும், உடுப்பும் இதெல்லாம் என்ன அன்ரி. எனக்கு இந்த நாட்டிலை வெறுப்பு ஒன்றும் இல்லை ஆனால், இங்கு இருக்கின்ற எங்கடை ஆட்கள், அவையின்ரை கதையள் ஒன்றுமே பிடிக்கவில்லை. நானும் வளர இவையள் மாதிரி வந்திடுவேனோ என்று பயமாயிருக்கு. அதாலை எனக்கு இங்கு வாழவே பிடிக்கேல்லை, ஆணி அடித்தாற்போல் அவன் சொன்னான். வயதுக்குமீறிய அவனது கதை எனது மனைவியை வாயடைக்க வைத்தது. ஆனால், நான் ஆச்சரியப்படவில்லை. ஏனென்றால் இத்தனை வயது வந்தும் எங்களுக்குத் தெரியாத ஏ.கே 47ஐப் பற்றியும், மோட்டார் பற்றியும், கிரனைட் பற்றியும், ரொக்கட் லோஞ்சர் பற்றியும் அவன் சொல்லச்சொல்ல ஆவென்டு கேட்டவன் நான். ஈழப்போராட்டம் புரட்சிகர ஆயுதப்போராட்டமா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-க முனைப்புப்பெற்றபோது போராளிகளின் வீரமிகு தாக்குதல்களை நேரிலே பார்க்கும் வாய்ப்புப் பெற்றவன் அவன். எனவேதான் அவனுடைய வாயிலிருந்து வந்த வார்த்தைகள் என்னை ஆச்சரியப்படுத்தவில்லை. ஆனால், அவனது மனஉளைச்சலின் காரணத்தை அறிய ஆசைப்பட்டேன். "கண்ணு! இங்கே வா. ஏன் இப்படிக் கதைக்கிறாய்? உனக்கு என்ன நடந்தது? அவனை அணைத்தபடி கேட்கிறேன். "பின்னை என்ன அங்கிள், இங்கே இருக்கிற ஆட்கள் எல்லாம் என்ன மனுசரா? அங்கே பொடியள் உயிரைக்கொடுத்து எவ்வளவு கஸ்டப்பட்டு ஆமியோடை சண்டைப்பிடிக்கிறாங்கள்? எவ்வளவு பிரச்சனைக்குள்ளை போராடுகிறாங்கள்? எத்தனையோ பேர் சாகிறாங்கள். இங்கை இருக்கிறவை என்னெண்டால் லெவல் அடிச்சுக்கொண்டு தங்களுக்கும் அங்கத்தையப் பிரச்சனைக்கும் தொடர்பில்லாத மாதிரி நடக்கினம். அந்தச் சிறுவனின் குமுறலுக்கு ஏதோ ஒரு காரணம் உள்ளதைப் புரிந்துகொண்டேன், "கண்ணு என்ன நடந்தது சொல் என்றேன்.

"இல்லை அங்கிள் எங்கடை அப்பா, அம்மா நடக்கின்ற முறையைப் பார்க்க எனக்கு விசராயிருக்கு. அவை சொல்லினம் எங்களுக்குக் 'காட்' இருக்குகொஞ்ச நாளிலை நஷனலிட்டியும் எடுத்திடுவம். நீ தம்பி ஈழம் அது இது என்றுவிசர்க்கதை கதைத்துக்கொண்டிருக்கக்கூடாது. நாங்கள் ஏன் இனி சிலோனுக்குப் போகப் போறம். அங்கே இருக்கின்ற எங்கடை சனங்களும் பொடியளினுடைய அட்டகாசத்தில் செத்துப்போயிடும். பிறகு எங்களுக்கும் அந்த நாட்டுக்கும் என்ன தொடர்பு? நீ நல்லாப் பிரெஞ்சைப் படிச்சு ஒரு டொக்டராகவர வேண்டுமெண்டு அப்பா சொல்லுகிறார் அங்கிள்" அதுக்கென்ன கண்ணு உன் அப்பா சொல்லுகிறதிலை என்ன பிழை? அவனைச் சீண்டும் நோக்கில் நான் கேட்கிறேன் என்ன அங்கிள் நீங்களும் விசர்க்கதை கதைக்கிறியள். அங்கை எங்கடை சுந்தர் அங்கிளும் பக்கத்து வீட்டுப் பாலன் அண்ணனும் கோட்டையிலிருந்து ஆமி வெளிக்கிடாமல் பார்க்கும் சென்றிக்கு போட்டு வாறதை நீங்கள் பாக்கேலையோ.பாலன் அண்ணனின் பாமினி அக்கா இயக்கத்துக்கு போஸ்டர் எழுதிக் கொடுக்கிறதும் நோட்டீசுகள் ஆக்களுக்குக் குடுக்கிறதையும் அவையின்ரை அம்மா, அம்மம்மா எல்லோரும் கொதிக்கிற வெய்யிலுக்குள்ளேயும் ஊர்வலங்களுக்குப் போறதையும் உங்களுக்குத் தெரியுமா? எங்கடை பகுதி முழுவதும் ரேன் போட்டு இயக்கப் பொடியளுக்குச் சாப்பாடு செய்து கொடுக்கிறது உங்களுக்குத் தெரியுமா? இயக்கப் பொடியள் எத்தனைபேர் ஆமியோடை சண்டைபிடித்துச் சாகிறாங்கள். என்னத்துக்காக அங்கிள்? அவையளும் ஒண்டும் வேண்டாமெண்டு பிரான்சுக்கோ பேர்மனிக்கோ வரலாம்தானே அங்கிள்?" நான் அவனை மேலே கதைக்கும்படி சைகை செய்தேன்.

அவன் தொடர்ந்தான். இல்லை அங்கிள், எங்கடை அப்பா, அம்மா சரியான மோசம். இவை மாத்திரம் சிலோனிலை இருந்தால் இயக்கப்பொடியள் இவையளை லைற் போஸ்றில் தொங்க விட்டிருப்பினம்." ஏன் கண்ணு அப்படிச் சொல்லுகிறாய். இது நான் இல்லை அங்கிள் அண்டைக்கொருக்கால் கறுப்பு யூலையில தேவா அங்கிளும் அவரோடை தோழர்களும் கொடி விற்றுக் காசு சேர்க்க வந்தவை. நானும் அவையோடை போகட்டோ என்று கேட்டதற்கு அவை வெளியால் போனபிறகு எனக்குச் சரியான அடி அங்கிள். எங்கடை அப்பா சொன்னார் இவங்கள் விசரங்கள். இயக்கமியக்கமெண்டு சீரழிஞ்சு போறாங்கள்.

www.tamilarangam.net



எனக்குமொரு தம்பி தறுதலையாய் வாச்சிருக்கு. அங்கை இருக்கேக்கை கொம்மினண்டு அது இது என்று திரிஞ்சுது. வெளியாலை வந்தால் திருந்திவிடும் என்று ஒரு மாதிரி இங்கு எடுப்பிச்சால் அது முன்னையை விட மோசமாய் இயக்க விசர் பிடிச்சுத் திரியுது" என்று தேவா அங்கிளைப் பேசினர். பிறகு அவன் [illegible] தான் அழிஞ்சது காணாது என்று என்ரை பிள்ளையையுமெல்லே கெடுக்கப் பார்க்கிறான் என்றும் பேசினர். அதோடை தேவா அங்கிள் எனக்குத் தந்தபுரட்சிப் பாடல் கசட்டை தூக்கி எறிஞ்சு உடைச்சுப்போட்டு தேவா அங்கிள் இனி இந்த வீட்டுப்படியேறினால் கொலை விழும்' என்று கத்தினர். அம்மா அவனை ஏன் பேசுறியள் என்று அப்பாவிடம் கண்ணைக் காட்டிச் சொல்லிவிட்டு என்னைக் கட்டிப்பிடித்து 'ராசா இந்த இயக்கம் அது இது என்று நீ போயிடக்கூடாதென்றுதானே சிலோன் காசுக்கு 50 ஆயிரம் ரூபா செலவழிச்சு உன்னை நாங்கள் இங்கே கூப்பிட்டனாங்கள், அந்த விசரன் தேவா சொல்லுற பேய்க் கதைகளைக் கேட்காமல் உந்த இயக்கக் கதைகளை எல்லாம் விட்டுப்போட்டு பிரெஞ்சைப் படித்து டொக்டராய் வந்து கார் வாங்கி... வீடு வாங்கி தங்கச்சிக்குச் சீதனம் கொடுத்து நல்ல மாப்பிள்ளையாய் எடுக்கவேணும். உனக்கு விருப்பமென்றால் நாங்கள் அமெரிக்காவுக்கே அனுப்பிப் படிப்பிப்போம். இனிமேல் இயக்கம் அது இது என்றெல்லாம் விசர்க்கதை கதைக்கக்கூடாது சரியா" அங்கிள் எப்படி அங்கிள் இந்தக் கதையை எல்லாம் கேட்டுக்கொண்டு நான் இங்கே இருக்கிறது. நான் எப்படியாவது சிலோனுக்கு – ஈழத்துக்குப் போகவேணும் அங்கிள்...!! கண் கலங்கிக் கண்ணன் அழுதான்

கண்ணனின் அழுகையையும் மீறி எனது மனக்கண்ணில் கண்ணனின் பெற்றோர் முகங்கள் தோன்றியது. பத்துப் பதினைந்து பேப்பர்கள் நிறைய ஐயா!! நாங்கள் தமிழ் மக்கள் சிறீலங்கா அரசாங்கத்தால் அடக்கப்பட்டவர்கள். அதனால் உரிமைப் போராட்டம் நடத்தி ஈழம் கேட்டோம். அதற்கு ஆதரவாக மேடை போட்டோம். புத்தகம் எழுதினோம் நோட்டீஸ் அடித்தோம். பொலிஸ் பிடித்தது. அடித்தது. உதைத்தது. ஆமி வந்து வீட்டை எரித்தது. கொலை செய்ய முயன்றது..... என்றெல்லாம் பட்டியல் போட்டு கண்களிலே நீர் ததும்ப விசாரணை செய்த அதிகாரிகளின் முன் சோக காவியம் பாடி அரசியல் அகதியாகப் பட்டயம் பெற்று .... இன்று புதிய அடையாளம் கிடைத்த திமிர்த்தனத்தோடு... போராட்டத்தை எள்ளி நகையாடி... போராளிகளைக் கொச்சைப்படுத்தி... இயக்கங்களைச் சிறுமைப்படுத்தி சுயநலமே ஒரு வடிவாக உருவாகும் இந்தப்புதிய சமூக விரோதிகள் கண்ணனின் அப்பாவும்,அம்மாவும் மாத்திரமல்ல. இப்போது அவர்களைப்போல் இங்கு இன்னும் பலர்.

ஆனால், இப்போது இந்தப் புதிய சமூக விரோதிகளைப் பற்றி கண்ணனுக்குச் சொன்னால் விளங்காது. இதுக்குக் கொஞ்சக்காலம் பொறுக்கவேண்டும். அதுவரை அழட்டுக்கும் குமுறட்டுக்கும்... கொதிக்கட்டுக்கும்... ஏனென்றால் கண்ணன் போன்ற புதிய சந்ததிகளின் குமுறல்கள் ஒன்றல்ல இந்தப் புதிய சமூக விரோதிகளைத் திருத்தட்டுக்கும். திருந்த மறுப்பின் இவர்களது உள்ளங்களைச் சல்லடை ஆக்கட்டுக்கும்

*********************** சூரியன் ***********************

www.tamilarangam.net



# ஈழம் ஏன் இந்தக் கொலைகள்

கடந்தகாலங்களில் ஈழத்தின் எதார்த்தமாகிப் போனவைகளில் ஒன்று கொலைகளாகும். பத்திரிகைகளின் பக்கங்கள் பல கொலைச் செய்திகளால் நிரப்பப்பட்டன. வானொலியும் கொலைகள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தது. ஈழத்திலிருந்து அனுப்பப்பட்ட கடிதங்களும் இரத்தம் காயாமலேயே வந்துகொண்டிருந்தன. வெளிநாடுகளிலுள்ள இயக்கங்களின் தொலை பேசிச் சேவைகளும் கொலைச் செய்திகளையே பரப்பிக்கொண்டிருந்தன. மொத்தத்தில்பார்க்கும் போது எல்லாமே கொலை மயமாகத்தான் இருந்தன.

ஏன் இந்தக்கொலைகள்? இந்தக் கொலைகளைச் செய்பவர்கள் யார்? கொலை செய்யப்பட்டவர்கள் யார்? இந்தக் கொலைகளின் போக்குகள் எவை?

எல்லாமே 'கொலைகள்' என்ற பொதுவான உண்மைக்குள் அடங்கினாலும் அவற்றின் தளங்கள் வித்தியாசப்படுகின்றன. இந்த வித்தியாசங்கள் பலவகைப்படும்.

∴ இயக்கம் இயக்கத்தைக் கொல்லுதல்,

∴ இயக்கம் பொதுமக்களைக் கொல்லுதல்,

∴ இயக்கம் இராணுவத்தைக் கொல்லுதல்,

∴ இராணுவம் இயக்கத்தைக் கொல்லுதல்,

∴ இராணுவம் மக்களைக் கொல்லுதல்,

∴ மக்கள் மக்களைக் கொல்லுதல்,

இந்தக் கொலைகளை நாம் இரண்டுவகையாகப் பிரித்துநோக்கும்போதுதான் எமது போராட்டத்தின் வெற்றியும் தோல்வியும் எங்கே தங்கியிருக்கின்றன என்ற நிதர்சனத்தை நாம்அறிய முடியும். ஒன்று நியாயப்படுத்தக்கூடிய கொலைகள். அடுத்தது நியாயப்படுத்த முடியாத கொலைகள். கொலைகள் எந்தத்தரப்பில் இருந்து செய்யப்படுகின்றதோ அந்தத்தரப்பினால் அவை நியாயப்படுத்தப்படுகின்றன. ஆனால், நியாயப்படுத்தல்கள் அனைத்தும் உண்மையான நியாயங்கள்தானா அல்லது சவடால்களா என்பதை எடைபோடத் தேவையான ஒரேயொரு அளவுகோல், அது எந்த இலக்கை நோக்கி எறியப்படுகிறது என்பதாகும்.

இயக்கங்களை எடுப்போம். ஈழப்போராட்டத்தின் ஆரம்ப காலகட்டத்திலேயே கொலைகள் தொடங்கிவிட்டன. இது தொடக்கமாகமட்டுமல்லாமல் சடைத்து வளரவும் தொடங்கியது என்பதை எமது வரலாறு காட்டும். இயக்கங்கள் இயக்கங்களின் வளர்ச்சிகளைத் தடுக்க கொலைகளை ஒரு பெரிய 'உத்தி'யாக எடுத்துக்கொண்டன. உண்மையிலேயே இது உத்தியல்ல தலையிலே மண்ணள்ளிப்போடல் என்பதை அவை மறந்துவிட்டன. எமது போராட்டத்தின் முதுகெலும்பு என்று கணிக்கப்பட்டவை இயக்கங்களே. ஆனால், தன்னாதிக்கத்தை நிலைநாட்டும் ஏதேச்சாதிகார வெறிக்கு சில இயக்கங்கள் அடிமையானதால், சில இயக்கங்கள் அந்த வெறிக்குப் பலியாகவேண்டிய நிலைமை தவிர்க்கமுடியாததாகிவிட்டது. கடந்தகாலங்களில் சிதைக்கப்பட்ட இயக்கங்களின் கனதியை உள்வாங்க எமதுபோராட்டம் தவறிவிட்டது.

இதேவேளையில் இயக்கங்களுக்குள் நடந்த கொலைகள் பலவற்றின் மர்மங்கள் இன்றுவரை தெரியாமல் இருக்கின்றன. சில கொலைகள் பகிரங்கப்படுத்தப்பட்டன. சில பிணங்களாக மட்டும் கண்டுபிடிக்கப்பட்டன. ஏனையன காணமல் போனவை பட்டியலில் சேர்க்கப்பட்டன. இயக்கத்துக்கு விசுவாசமாயிருந்தவனொருவன் இயக்கத்தால் கொலை செய்யப்படும்போது 'துரோகி' எனப்படுகின்றான் அல்லது இயக்கவிதிகளை மீறியவன் எனப்படுகின்றான். ஈழவிடுதலை இயக்கங்களில் பல இரத்தம் சிந்தின என்பது உண்மையே. ஆயினும் இன்றைக்கும்கூட அவை சரியான வளர்ச்சிப் பரிணமத்தை அடையாதுநிற்கும் போது அன்றைய அவர்களின் எடைபோடல்கள், தீர்ப்புகள் சரியாக இருந்திருக்குமா? என்ற ஒரு கேள்வி எழுகின்றது. எனவேதான் அன்றிலிருந்து இன்றுவரை இயக்கங்களினுள் உள்ளே வைத்துக் கொல்லப்படுபவர்கள் அத்தனைபேரும் 'துரோகிகளா என்ற சந்தேகமும் பிறக்கின்றது. அரசியல் தத்துவங்களின் ஆழங்களை விளங்கிக்கொள்ளாமல் பிழையான மொழிபெயர்ப்புகளை இயக்கங்கள் தாமாக இயற்றிக்கொண்டதும் இந்த உட்கொலைகளிற்குக் காரணமாகின்றது. இந்தக்கொலைகள் மீதான நியாயப்படுத்தல்களில் உண்மையிலும் பார்க்கக் ஹீரோயிஸமே மேலோங்கி நிற்பதை அவதானிக்கலாம்.

போராட்டம் தனது முகத்தில் கிடந்த திரையை விலக்கத்தொடங்கியபோது இராணுவத் துப்பாக்கிகளின் இலக்குகள் தமிழ் பேசும் மக்களை நோக்கித் திரும்பின. அன்றைய காலகட்டத்தில் இது தவிர்க்கமுடியாததாக இருந்தது. ஏனெனில், இராணுவத்தைத் தாக்கிவிட்டு ஓடுதல் இயக்கங்களின் அன்றைய மரபுகளில் ஒன்று. ஏன் இன்றும்கூட இம்மரபு சில இயக்கங்களால் பேணிக்காக்கப்படுகின்றது. தாக்கிவிட்டு இயக்கம் ஓடியவுடன்

www.tamilarangam.net



இராணுவம் தனது ஆத்திரத்தைப் பொதுமக்கள்மீது காட்டிச் செல்லும். இந்தக்கொலைகளை இராணுவம் நியாயப்படுத்து கையில் இறந்தவர்கள் அனைவரும் 'பயங்கரவாதிகள் என்று சொல்லும். ஒழுக்கமற்ற இராணுவத்தின் வெறிக்கூத்துக்களை நியாயப்படுத்துபவர்கள் தாம் பயங்கரவாதிகளாக இருக்க முடியும். இங்கே ஒருவிடயத்தை மறக்கமுடியாது. அதாவது இராணுவ நடவடிக்கைகளில் தயவு, தாட்சண்யம், இரக்கம் இருக்கும் என்று எதிர்பார்ப்பது தவறுதான்.

இந்த இராணுவத்தினரால் செய்யப்பட்ட கொலைகளிலும் பார்க்க இயக்கங்களின் கொலைகள் மக்களினால் பெரிய அளவில் விமர்சிக்கப்பட்டிருக்கின்றன என்பது ஒரு உண்மை. இயக்கம் இராணுவத்தைக் கொல்லுதல் என்பது எமது இனத்தினை தாழ்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாகும். இனத்தின் அழிவைத் தடுப்பதற்கான பல வழிகளில் இதனையும் ஒன்றாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. இராணுவத்தின் பக்கத்தில்விழும் கொலைகள்தாம் ஈழத்தில் வாழும் தமிழ்பேசும் இனத்திற்கு ஆறுதலைத் தரக்கூடியன. ஈழம் கிடைக்கும்வரை இந்த நடைமுறை இயக்கங்களின் விதிகளில் ஒன்றாய் இருக்கும். ஒரு மனித இனத்தின் அழிவிலே எதேச்சாதிகார அரசின் சுயநலங்களைப் பாதுகாக்க வெறிகொண்டிருக்கும் கூலிப்படைகளான இராணுவத்தின் பக்கம் விழும் கொலைகளினை ஆதரிப்பன ஏகாதிபத்தியச் சக்திகளாகவே இருக்கும். கொலைகள் செய்வதிலும், கொலைகளைச் செய்வது எப்படி என்ற திட்டங்களைத் தீட்டுவதிலும் வல்லவர்களான மொஸாட், மற்றும் ஏனைய சர்வதேசக்கொலை நிபுணர்களிற்கான கல்லறைகளை எமது நிலத்தில் எழுப்புவது தர்மத்தின்பாற்பட்டதும், மனிதகுலத்திற்கான உரிய சேவையுமாகும்.

மூன்று வருடங்களுக்குள் ஏழாயிரம் கொலைகள் சிறீலங்காவில் நடத்தப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை பிரெஞ்சுத் தினசரியான 'லூ மொந்த்' வெளியிட்டபோது மக்கள்மீது இராணுவம் நடத்தும் கொலைகளின் உக்கிரம் உலகிற்கு ஒருவாறு உறைக்கத்தொடங்கியது. ஆனால், மிகவும் அண்மைக்காலத்தில் சமூகவிரோதிகள் என்ற பெயரில் இயக்கங்கள் வழங்கும் தண்டனைக்கு பொதுமக்களும் பலியாகின்றார்கள்.

www.tamilarangam.net



இதற்குள் சித்திரவதைகளின் குரூரங்களும் கவனிக்கத்தக்கன.

சமூகவிரோதியென்று தீர்மானிக்கப்படுபவன் மின்கம்பத்தண்டனைக்கு ஆளாகின்றான். அல்லது தலை மழிக்கப்பட்டு பொது மக்களின் முன் கட்டிவைக்கப்பட்டு அவமானப்படுத்தப்படுகிறான். ஈழத்திலே சமூகவிரோதிகள் இல்லாமலில்லை. கொலைகளையே இவர்களிற்கான இறுதிமுடிவாக இயக்கங்கள் சில கொண்டிருப்பது கவலைக்குரியது. சரியான அரசியல் படிமானங்களுக்குள் உள்வராத சில இயக்கங்கள் சமூகவிரோதிகள் என்ற பெயரில் அப்பாவிகளைக் கொல்லுவதனுல் போராட்டத்தின் மீதான மக்களின் ஆதரவிற்கு அந்நியமாகிவிடக்கூடிய சந்தர்ப்பங்கள் தோன்றலாம்.

ஈழத்திலிருந்து வரும் கடிதங்களில் தான் இயக்கங்கள் விடும் பிழைகள் பெரும்பாலும் பேசப்படுகின்றன. நடைமுறைச் சிக்கல்கள் இயக்கங்களின் பக்கம் சில வேளைகளில் பாதகமான புள்ளிகளைப்போட்டுவிடுகின்றன. பாடசாலை மாணவர்கள், இளம்பெண்கள், சிறுவர்த்தகர்கள் ஆகியோர் இயக்கங்களின் குண்டுகளிற்கு இரையாகியிருக்கின்றனர். இவைகளில் பெரும்பாலானவை நியாயிக்கப்படமுடியாத கொலைகளிற்குள்ளேயே அடங்குகின்றன.

இராணுவத்தின் விழிகளின் முன் ஈழமக்கள் அனைவரும் பயங்கரவாதிகளே. அதிலும் குறிப்பாக இயக்கப்போராளிகளைக் கொல்லுவதில் இராணுவம் விசேட கவனம் செலுத்துகின்றது. சிலவேளைகளில், போராளிகள் இராணுவத்தின் வேட்டைக்கு பலியாகின்றனர். எமது போராட்ட வரலாற்றில் போராளிகள் தலைப்பில் இராணுவத்தினுல் அதிக சேதங்கள் ஏற்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

மக்கள் மக்களைக் கொல்லுதல் என்ற அம்சமும் இங்கு இனப்பிரச்சனையின் அடிப்படையில் வைத்து நோக்கப்படுகின்றது. அதாவது சிங்களம் பேசும் மக்கள் தமிழ் பேசும் மக்களைக் கொல்லும் மரபு 1958ம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1960 1977, 1981, 1983 களில் நடைபெற்ற இனக்கலவரங்களில் சிங்களம் பேசும் மக்களினுல் தமிழ் பேசும் மக்கள் மிகவும் கொடூரமாகக் கொல்லப்பட்டிருக்கின்றனர். சிங்களக் காடையர்களே இக்கொலைகளைச் செய்த போதும் சிங்கள மக்கள் அந்த வேளைகளில் மௌனித்து இருந்த காரணத்தினுல் அவர்களும் கொலைகளுக்கு பொறுப்பாளியாக வருகின்றனர். இங்கே, மக்கள் பகடைக்காய்களாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர். சிறீலங்காவில் மக்கள் உணர்ந்

www.tamilarangam.net



சிவசப்படுத்தப்பட்டுத்தான் கொலையாளிகளாக்கப்படுகின்றன ர். தலைவன் சொல்லுவதற்கெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு தலையாட்டும் நிலைமை இருக்கும்வரை மக்கள் மக்களைக் கொல்லும் குரோதப்போக்கும் இருந்துகொண்டே இருக்கும் என்பது கண்கூடு. கொலையின்மீது சமூகத்தின் விருப்பம் கூடிக் கொண்டிருக்கும்போது அங்கே மனிதம் ஏதோ ஒரு வகையில் செத்துக்கொண்டிருக்கின்றது என்றுதான் அர்த்தம். தந்திரங் களை வைத்து கண்ணும்பூச்சி விளையாடுவது மனித குலத்தின் நோக்கமாக மாறி வருகின்றது. ஒவ்வொரு மனிதனும் தனது நலத்திற்கே முதலிடம்கொடுத்து வருவதைப்போன்று ஒவ்வொ ரு நாடும் தன் நலத்திற்கே முதலிடம்கொடுத்து வருவதனல் பிரச்சனைகள் இழுபட்டுக்கொண்டே போகின்றன. ஆகவே எங்கு பார்த்தாலும் கொலைகள்... கொலைகள் ... கொலைகள்....

ஈழத்துக்காகப் போராடும் அமைப்புக்கள் இந்த உண்மையின் தளத்தில் நின்று இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் சகலவித மான கொலைகளைப்பற்றியும் தத்துவார்த்த ரீதியில் மிகஆழ மாகச் சிந்திக்க வேண்டும்.

தோழர்களே!

அடக்குமுறையும், அராஜகமும் கைகோ ர்த்து இன்றைய ஈழப்போராட்டத்தின் திசைவழி களை நசுக்க முயலும் இருள்சூழ்ந்த இன்றைய காலகட்டத்தில் ஒளியை நோக்கி போராட் டத்தை நகர்த்த வல்ல உங்கள் ஆக்கங் களையும், ஆதரவையும் 'தமிழ் முரசு' வேண் டுகிறது. அனைத்துத் தொடர்புகட்கும்.....

EDITOR
'TAMIL MURASU'
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

www.tamilarangam.net



# சூரியனோடு பேசுதல்

கவிதைத் தொகுப்பு – வ.ஐ.ச.ஜெயபாலனின் சூரியனோடு பேசுதல்.

வெளியீடு – யாழ் பதிப்பகம்–கோயம்புத்தூர்.

ஈழப்போராட்டத்தின் கொலைவெறிபிடித்த கோரத்தனமான அத்தியாயங்கள் ஒரு புறமாகப் புரட்டப்படுகின்ற அதே வேளையில் கலையுணர்வுடன் நெஞ்சக் குமுறல்களை, நிஜத்தின் தரிசனங்களை நேராகவே வார்த்தைகளில் குவித்து நெஞ்சுக்குள்ளேயே நாளெல்லாம் நிற்கவைக்கும் கவிதைகள் இன்று ஈழத்து இளம் கவிஞர்களால்– போராளிகளால் தொடுக்கப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான மைல்கள் தூரத்துக்கப்பால் ஓடி வந்து பாசத்தையும், தேசத்தையும் மாத்திரமன்றி மனித நேசத்தையும் கூட மறந்து போய் புதிய அடையாளங்களையும் புதிய முகவரிகளையும்தேட முயலும் ஈழ அகதிகளுக்கு..... தலையில் மாத்திரமல்ல நெஞ்சிலும் அடிபோட்டு....இன்றைய ஈழத்தின், ஈழமக்களின் அவலநிலையை.... வீரமிக்க எமது போராட்ட வரலாற்றை....வேறுபட்ட நோக்குகளை....மக்களின் மனவியல்புகளை ஒரு சில வரிகளிலேயே படம் பிடித்துக்காட்டும் நெஞ்சிலே தங்கி நின்று நினைவுகளை கலக்குபவை.

தமிழகத்திலே முற்போக்குக் கவிஞர்கள் என்று வர்ணிக்கப்பட்டவர்களெல்லாம் வாழ்வுக்கும் வசதிக்குமாக சினிமா உலகத்துக்கு சாமரம் வீசச் சென்று கொண்டிருக்க ஈழத்திலே தம் வாழ்வையே போராட்டத்துக்கு அர்ப்பணித்த போராளிகள் ஒரு கரத்தில் துப்பாக்கியையும் மறுகரத்தில் பேனையையும் பற்றிக் கொண்டு தமது புரட்சிகர இலக்கியப்பணியை தொடருகின்றனர். இன்று ஈழத்திலிருந்து உருவெடுத்துவரும் புரட்சிகர இலக்கியங்கள் சர்வதேச தரத்துக்குநிகரானவை. உலக விடுதலைப் போராட்ட வரலாற்றுமகுடத்தில் பதிக்கப்படும் சிவப்பு வைரங்கள் அடிமைத்தளையை அறுக்கவந்த கூர்வாள்கள் அடக்குமுறைக்கெதிரான குத்தீட்டிகள். அந்த வகையில் எம்மை...எமது போராட்டத்தை பெருமைப்படச் செய்ய வந்திருப்பதே தோழர் வ.ஐ.ச.ஜெயபாலனின் சூரியனோடு பேசுதல் கவிதைத் தொகுப்பு.

ஜெயபாலனின் 16 கவிதைகளைக் கொண்ட இத்தொகுப்பின் முன்னுரையிலேயே ஜெயபாலன் எங்கள் நெஞ்சங்களுடன் நெருங்கிப் பேசத் தொடங்கிவிட்டார். ஈழத்தின் காட்சிகள் ஜெயபாலனின் கரங்களால் அவரது முன்னுரையில் நம் கண்முன் இப்படி விரியத் தொடங்குகிறது.........

"அண்மையில் நான் எனது தாயகம் சென்றுவந்தேன். போரின் நடுவிலும் மக்கள் நம்பிக்கையைத்தக்க வைத்துக்கொண்டு வாழ்கிறதைக் கண்டு நெகிழ்ந்து போனேன். காற்றையும், நீரையும் கிழித்துச் சென்று கடலில் அவர்கள் மீன் பிடிக்கின்றார்கள். ஜே.ஆரின் கனவுப்பறவைகளின் கெலிக்கெப்ரர் கழுகுகளின் நிழல் விழுந்து ஊர்ந்து செல்லும் வயல்களை அவர்கள் உழுது விதைக்கின்றார்கள். சிறு சிறு தொழிற்கூடங்களில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, நடந்துவரும் போராட்டத்துக்குத் தமது பங்களிப்பை நமது தொழிலாளர்கள் நல்குகின்றனர்.

பல்வேறு இயக்கங்களையும் சேர்ந்த இளைய போராளிகளின் கால்கள் நமது கடற்கரையில், காடுகளில், வயல்களில், தெருவீதிகளில் படிகின்றன.

www.tamilarangam.net



மக்கள் இவர்களையிட்டு பெருமைப்படக் கூடிய தருணங்களை ஒருபோதும் தவறவிடுவதில்லை. தவிர்க்க இயலாத இடத்தில் விமர்சனங்களையும் கண்டனங்களையும் கூறத்தவறுவதில்லை. இப்போர்ப்படைகள் எப்போது மக்கள் படைகளாக விரிவடையும் எப்படி தெரியவில்லைதான். இதற்காக நமது இளைய அறிஞர்கள் பணிபுரிகின்றனர் என்பதும், இதனைச் சாத்தியமாக்குவதற்காக நமது கவிஞர்களும் எழுத்தாளர்களும் கலைஞர்களும் உழைக்கிறார்கள் என்பதும் நிறைவு தருவனவாகும். இவை எல்லாம் ஈழத்து நிலைமைகள் என்பதோடு மாத்திரம் ஜெயபாலன் ஓயவில்லை. தொடர்கிறார்.....

'பழுத்த இலைகள் உதிர்ந்து, சிறுசெடிப்பிராய வேலிகளைத்தகர்த்து விருட்சமாக எழுகின்ற பெருமரம் போல, இளைஞர் இயக்க மட்டத்தொடக்கப் புள்ளிகளுக்குள் தேங்கிப்போகாமல், மக்கள் இயக்கம் என்கின்ற பெருவிருட்சமாக நமது விடுதலைப்போராட்டம் முளைப்புக் கொள்கின்றது. இளம்போராளிகள் மக்கள் மயமாவதற்கும். மக்கள் போர்மயமாவதற்கும், எமது கவிஞர்கள் கிராமத்து தெருக்களில் மக்கள் குழப்பாடுகிறார்கள். எமது நாடகக்காரர்கள் மண் சுமந்த மேனியருக்காக ஊர்வீதிகளில் நாடகங்கள் போடுகின்றார்கள்.

சிறுபத்திரிகைகளில் இன்றும் கவிதைகள் வருகின்றன. முன்னைவிட முக்கியத்துவத்தோடு அவை மக்களால் படிக்கப்படுகின்றன. என்பது தோழர்கள் இன்றும் ஆய்வுநூல்களை வெளியிடுகின்றார்கள். குழுவாத உணர்வுகளை ஒதுக்கிவிட்டு இளைஞர்களும், போராளிகளும் அவற்றை வாசிக்கின்றனர். போர்ப்பயிற்சி செய்யும் இளைஞர்கள் காதலும் செய்கிறார்கள். போராளிகள் காதலிக்கக்கூடாது என்ற இளைஞர் இயக்கமட்ட வேலிகளைத் தகர்த்துக் கொண்டு போராட்டம் மக்கள் மயப்படப்பட, போராட்டம் முழுவாழ்வாக விரிவடைகின்றது. போராட்டத்திற்கும் வாழ்வுக்கும் இடையிலான அந்நியப்படும் பண்பை, நமது வாழ்வு விரைவில் இழந்து போகும் என்றே நம்புகின்றோம்..... என்று நம்பிக்கையுடன் ஈழத்தின் விடியலை நோக்கியிருக்கும் இந்தக் கவிஞனின் கரங்களை அப்படியேஎடுத்து கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் போலத்தோன்றுகிறது.

முன்னுரையே இப்படியென்றால் கவிதைகள் எப்படி விரிகின்றன தெரியுமா.. தென்னிலங்கையில் ஏற்பட்ட சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சி ஜெயபாலனின் 'வசந்த காலம்1971 'கவிதையில் தெரிகிறது.

எனினும் எனினும் இலங்கைத் தீவின்
சிங்களக் கிராமப் புறங்களில் மட்டும்
இளைஞர்கள் சிலபேர் ஒருவரை ஒருவர்
இரகசியமாகத் தட்டி எழுப்பினர்.
நீண்ட நீண்ட இரவுகள் விழித்து
இருளில் தாழும் மக்களுக்காக
மலைகளை அகற்றும்
பரம ரகசியம் பேசிக்கொண்டனர்

என்று

சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியை விபரித்த போதும் சரி அதற்கெதிரான ஆட்சியாளரின் அடக்குமுறை இரத்தம் சிந்த கவிதைவரிகளாக தொடர்கிறது.

திடீரென அந்த வசந்த நாட்களில்
தெருக்கள் தோறும் துப்பாக்கிச் சன்னதம்
குடியானவரைத் திருக்கிட வைத்தது
வீதி மருங்கெல்லாம் இரத்தப் பூக்கள்,
இருண்ட அந்தக் கிராமங்கள் தோறும்
எத்தனை எத்தனை இளைஞர்பிணங்கள்.

www.tamilarangam.net



கரிசல் மண்ணுக்குள் புதைக்கப்பட்டன
குயில்கள் பாட
திருமண ஊர்வலம் போல வந்த
எழுபத்தொன்றின் வசந்த காலம்
ஆந்தைகள் அலற
மரண ஊர்வலமாய் கழிந்தது

என்கிற ஜெயபாலன் தனது 'சூரியனோடு பேசுதல்' கவிதையில்

மீண்டுமென் தாய்நாட்டின்
கரைகளிலே
எம்முடைய கால்கள் எழுந்து நின்று
உன்னைக்காணும் நாட்களை மீட்டெடுக்க
இந்நாளை நான் தருவேன்

என்று நம்பிக்கை விதைகளை எம் நெஞ்சிலே தூவுவதோடு போராட்டத்திற்கு ஆன தனது பங்களிப்பையும் வலியுறுத்துகின்றார். 'உயிர்த்தெழுந்த நாட்கள்' கவிதையில் 83ன் இனஅழிப்புக் கொடுமைகளை விபரித்த ஜெயபாலன் 'மீன்பாடும் தேன்நாடு' கவிதையில் ஈழத்தின் கிழக்குமாகாணத்தில் தமிழ் – முஸ்லீம் மக்களுக்கிடையே தூண்டிவிடப்பட்ட மோதல்கள் தந்த துயரில் எழுதுகிறார்....

எங்கிருந்தோ வந்தவர்கள் எல்லாம் அனுபவிக்க
சொந்தங்கள் இங்கே துயரம் சுமக்கிறது

எனக்குமுறும் அவர் இரு இனங்களுக்கிடையிலான அந்நாள் நேசத்தை இப்படிப் பிரதிபலிக்கின்றார்.

காலமெல்லாம் இங்கே
கணபதியும் எங்கள் காக்கா முகம்மதுவும்
தெம்மாங்கு பாட திசைகாணும் தாய் எருமை
திசைதோறும் புற்கள் முளைதொட்ட பூமியிலே
கன்று நினைந்து கழிந்தபால் கோலமிடும்

என்ற சந்தோசக் கும்மாளமிட்ட கவிதைவரிகள் இன்று இரு சமூகங்களுக்கிடையிலேயும் ஏற்படும் மோதல்கள் குறித்துக் குமுறுகிறார்.

எல்லைப்புற வயலும் எருவான் கடற்கரையும்
செல்வங்கள் எல்லாம் சொத்தாய்ப் பிறர்கொள்ள
பொட்டல் வெயிலில்
கணபதியும் எங்கள் காக்கா முகம்மதுவும்
சிண்டைப் பிடித்துக்கிடக்கின்றார், என் சொல்வேன்?

இப்படியே... இப்படியே தனது ஒவ்வொரு கவிதையாலும் நெஞ்சைத்தொடும்... நெஞ்சிற்குள் நிற்கும்...இந்தக் கவிஞன் 20 பெப்ரவரி 86இன் நாட்குறிப்புக்கவிதையில் கொதித்துக் கிளம்புகிறான். அக்கவிதையில் ஒவ்வொரு எழுத்துக்களும் நெருப்பாய்க் கனல்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செய்திசொல்லும் வானொலி அடங்க
தங்கையின் கூச்சல்
"யாழ்ப்பாணத்தில் விமானத் தாக்குதல்"
என கபாலத்துள் அனுபு பிளந்தது
என் தாய் மண்ணில் எரிமலை வெடிக்க
எனதினம் குருத்துக்கள் சிதைய
ஒரு விதி திம்பு மேசையில் எழுதப்பட்டதோ?
எங்கே பிரளயம்?
எங்கு என் தாய்மண் குதறப்பட்டது?
எழுபதிலே சவாலாய் நிமிர்ந்த
வல்வைத் துறையிலா?
கிழங்குகள் போல
தலைமறைந்த போராளிகளின்
விளை நிலமான உரும்பிராயிலா?
யாழ்ப்பாண அரசைக் கட்டிக்காத்த
செண்பகந்தப் படைகளின்
வாழையடியில் வாழைகள் நிமிரும்
கள்ளியங்காட்டிலா?
வீட்டுக்குவீடு கலைஞர்கள் பிறக்கும்
அளவெட்டியிலா?
அம்பதுகளிலே பேசப்பட்ட
நிச்சாமத்திலா?
யாழ்குடாநாட்டின் எந்த ஊரில்
இனக்கொலைகாரனின் வன்மம் தீர்ந்தது.

என்று குமுறும்போதும் சரி
தீயின் நடுவே.....
வியட்நாம்போல ஈழமே எழு

என நம்பிக்கைக் கரங்களை உயர்த்தும்போதும் சரி
'றை' கட்டி
நாமேன் இன்னமும்
பேச்சுவார்த்தை மேசையில் இருந்தோம்?
கொலைபடும் மக்களைப்பற்றிய
ஆகம விதிகளை அளவளாவுவதற்கா?

என்று கொதிக்கும்போதும் சரி
அதும்வர்க்கச் சிங்கள மொழியில்
போர் என்றாலும் போர்
சமாதானம் என்றாலும் போர்
எதை நாம் பேச?
ஆளப்படுகின்ற சிங்கள மக்களோ
வாய்மொழி இழந்து
முகங்கள் இழந்து

www.tamilarangam.net



அபினிதின்று
மூச்சுமிழந்து
ஆளும் பேய்களின் நடைப்பாவையாக
இந்த மனிதன் விழிக்கும் வரைக்கும்
எவருடன் பேச?
முழங்குக நமது போர்முரசங்கள்

என்று போர்முரசு ஒலிக்கும்போதும் சரி

மக்களே! மக்களே! வீதியில் இறங்குவீர்
கோடு வரைந்து
போருக்கெழுவீர் ....
வானில் எதிரி பறந்து வருவது
அமெரிக்க விமானம்
இஸ்ரேல் விமானம்
அதிர்ச்சி அடையாதீர்!
சீரழிந்த சீன விமானம் ....
இனக்கொலைக்குத் துணையென வந்த
மாண்ட இனத்தின் பகைவரைக் காண்பீர்!
இவர்களே நமது முதல் எதிரிகள்
ஏனையோரோடுதான் நமக்குப் பேச்சு

என்று எதிரிகளை இனங்காட்டும்போதும் சரி

இன்று நமக்கு வேண்டியதெல்லாம்
ஒரு கோடு
முதல் எதிரிக்கும் ஏனையோருக்கும்
நடுவிலோர் கோடு
குருசேத்திரத்திற்கும் விஜயன்போல
குழம்பிடாமல் ஒரேயொரு கோடு

என தனி ஈழத்தை வலியுறுத்தும் கவிஞர் போருக்கு மக்களை அழைக்கின்றார்.

மலையக மக்களே!
முஸ்லீம் மக்களே!
தமிழ் மக்களே!
என்னரும் ஈழதேசக்குடிகளே!
ஊர்கள்தோறும் ஆயுதம் தாங்குவீர்
கோடுகள் கிழிக்க!
ஊர்கள்தோறும் ஆயுதம் தாங்குவீர்
போர்களை வெல்ல!

என அறைகூவும் இந்தக் கவிஞர்

மகத்துவங்கள் ஆயிரம் நிறைந்த
மரணத்தின் மேலும் வாழ்வே வலியது

எனக் கவிதையை இறுக்கிக்கூறி முடிக்கிறார்.

www.tamilarangam.net



* ஒருமைப்பாடு என்பது என்ன அடிமைப்படுத்தலா?
* நாடுகள் என்று இணைதலும் பிரிதலும் சுதந்திரமாக மானிட இருப்பை உறுதி செய்திடவே.
* இந்த நாட்டில் எனக்கிடம் இல்லை. இந்த உலகில் எனக்கிடம் உள்ளது . ஆயின் எங்கென் நாடு? எங்கென் நாடு?
* புகலிடத்துக்கு விலையென நமது சுதந்திரத்தை எப்படித் தருவது?
* நாம் வாழவே எழுந்தோம் சாவை உதைத்து,

என்று அதர்மத்துக்கு எதிராக ஓங்கி ஒலிக்கும் இந்த ஆயுதபாணியான கலைஞனின் குரல் நெஞ்சைவிட்டு அகலாது ஈழப்போராட்டத்தில் இதுபோன்ற புரட்சிகர இலக்கியங்களின் படைப்பு வரலாறு தொடரட்டும். அதன்மூலம் மானுட நேசம் தழைத்தோங்கட்டும்.

%%%%%%%%%%%%%%%%%%% காந்தன் %%%%%%%%%%%%%%%%%%%%%%



www.tamilarangam.net



சிலபக்கங்கள்

ஜூட் சுகிர்தன்

# கலக்கத்தின் பிடியில் சிறீலங்கா இராணுவம்

"பயங்கரவாதம் நீடித்துக்கொண்டே போனால் வடக்கு, கிழக்கு மட்டுமல்ல இந்த நாட்டையே நாம் இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம். ஆயுத நடவடிக்கைத் தீர்வு எந்த வகையிலும் சாத்தியப்படக்கூடியதல்ல. அதனால் நாம் பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடலாம்."

இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை சர்வாதிகாரத்தினால் நீடித்துக் வைத்துக்கொண்டிருக்கும் ஆசியாவின் அதிஉத்தமர் ஜே.ஆர் தான் இப்படித் தனது கலக்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார். கடந்த மாதம் குருநாகலில் மகாசங்கத்தின் மகாநாடு ஒன்றில் உரையாற்றும் போது தான் அவருக்கு இந்த ஞானம் உதித்திருக்கின்றது. இது உண்மையான தெளிவா அல்லது நடிப்பா என்பது வே விடயம். ஆனால், சிறீலங்கா அரசினுள் இனப்பிரச்சினை விதைத்திருக்கும் கலக்கத்தினை இது தொட்டுக்காட்டுகின்றது.

கடந்த சிலமாதங்களாக சிங்கள அரசியல்வாதிகளினால் உதிர்க்கப்பட்ட கருத்துக்கள் கவனத்துக்கெடுக்கவேண்டியதொன்றே. இனப்பிரச்சினையை மேலும் இழுத்தடித்துக்கொண்டு சென்றால், பொதுவாக தீவின் நிலைமை சீக்கிரத்திலேயே அந்திமத்துக்கு வந்துவிடும் என்று அவர்கள் அச்சம் கொள்கின்றார்கள். இதுவரை காலமும் இனப்பிரச்சனையை விளையாட்டாக எடுத்தவர்கள் தற்போதுதான் அதனைப்பற்றி 'சீரியஸாக'ச் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றார்கள் போலத் தெரிகின்றது. உதாரணத்துக்கு நிதியமைச்சர் ரொனி டிமெல் எட்டியாந்தோட்டையில் ஒரு பொதுக்கூட்டத்தில் அண்மையில் உரையாற்றும்போது தனது பீதியை பின்வருமாறு தெளிவுபடுத்தியுள்ளார்.

"அதிகாரப்பரவலாக்கலை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஈழம் என்னும் தனிநாடு உருவாவதை எவராலும் தடுக்கமுடியாது. யார் கூக்குரலிட்டாலும் தமிழர்களுக்கென தனிராஜ்யம் உருவாகியே தீரும்.

"சிங்களவர்களின் சனத்தொகை ஒருகோடி மட்டுமேயாகும். தமிழர்கள், தமிழ்நாட்டில்மட்டும் ஆறுகோ பேர் வாழ்கிறார்கள். உலகம் முழுவதுமாக சுமார் 10 கோடி தமிழர்கள் உள்ளனர். கேரளம், கன்னடம், ஆந்திரா ஆகிய இந்திய மாநிலங்களில் திராவிடர் இனத்தைச் சேர்ந்த மேலும் பல கோடிபேர் வாழ்கின்றனர். அவர்களின் சக்தியை நாம் உணரவே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைச்சரின் பார்வை பிழையானதுதான். இதேவேளையில் அவரது பீதிகூட நியாயமானதாக அமையவில்லை. உண்மை எது? உலகில் வாழும் 10 கோடி தமிழ்பேசும் மக்களா இன்று இலங்கை அரசைப் பயமுறுத்திக்கொண்டிருக்கின்றனர்? பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான ஈழப்போராளிகளும், ஈழம் தான் எமது இறுதி முடிவு என்பதில் உறுதியாக நிற்கும் மக்களுமே இன்று சிங்கள இனவெறி அரசைப் பயமுறுத்தும் சக்திகளாவர்.

ஈழப்போராட்டம் இலங்கை அரசாங்கத்தின் ஆணிவேரை ஆட்டிக்கொண்டிருக்கின்றது என்பதில் சந்தேகம் எதுவுமே இல்லை. இதனை அரசாங்கமே இப்போது உணர்ந்து வருகின்றது. வெளிநாட்டு நிதியுறவுகளை இனப்பிரச்சனை பாதித்துவருகின்றது. தீவின் பொருளாதாரம் சிதைந்துகொண்டுபோவதற்கு இனவெறிக்கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அரசியலே காரணம். ஆனால் ஈழப்போராளிகளின் தலையில்தான் பழிபோடப்படுகின்றது.

அண்மையில் கொங்கொங் பத்திரிகையொன்றிற்கு இலங்கைப் பிரதமர் பிரேமதாச அளித்த பேட்டியில்,

> " 35 தீவிரவாதக் குழுக்கள் தனிநாடு கோரிப் போராடுவதால் எமது பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது."

என்று தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதித்தது ஈழப்போராட்டம் அல்ல. தமிழ்பேசும் இனத்தை அழிக்க இலங்கை அரசு வரைந்து வைத்துள்ள திட்டம் தான் தீவின் பொருளாதாரத்தை நாசமாக்கிக்கொண்டிருக்கின்றது. பயங்கரவாதத்தை அழிக்கவேண்டும் என்ற பெயரில், பிரெஞ்சு நாணயப்படி 6மில்லியன் பிராங்குகளை நாளொன்றுக்குச் செலவிட்டுக்கொண்டு பொருளாதார வளர்ச்சியை எதிர்பாக்கமுடியுமா?

இதேவேளையில் லலித் அத்துலத்முதலிக்கு ஏற்பட்டிருக்கும் கலக்கமும் கவனிக்கத்தக்கதொன்று. இவர் இப்போது கடுமையாகச் சிந்திப்பதெல்லாம் சர்வதேச இராணுவத்தைப் பற்றித்தான். இனவெறி அமைச்சரின் கூற்றுக்களே, இராணுவவெறியாட்டம்எப்படி மோசமாக இருந்திருக்கும் என்ற ஒருபடத்தை அனைவரது மனத்திலும் கொண்டுவரத்தக்கது.

www.tamilarangam.net



கடந்தவருடம் செப்டம்பர் மாதம் பியகமவில் மாதிரிக்கிராமம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில்

> " பாதுகாப்பு நடவடிக்கைகளால் அப்பாவிகள் உயிரிழக்க நேரிட்டால் சர்வதேச இராணுவம் இங்கு வந்துவிடும். விவேகத்துடன் தான் நாம் செயற்பட வேண்டும்."

என்று தெரிவித்த அவர், அடக்குமுறையால் இனப்பிரச்சனையை அடக்கமுடியாது என்பதையும் மறந்துபோய் ஒப்புக்கொண்டுள்ளா

> " சோழ மன்னனுக்கும் ஐந்தாவது மகிந்தாவுக்கும் இடையிலான யுத்தமும் ஐந்து வருடங்கள் நீடித்தது. அடக்குமுறைகளால் உடனடியாக ஜெயித்துவிடமுடியாது. அந்த வழியால் சென்றால் விளைவுகள் மிகவும் மோசமாக இருக்கும்."

சிங்கள சோவனிஸ அரசியல்வாதிகள் இப்படிச் சொல்லிவிட்டவுட அவர்கள் உண்மையிலேயே ஞானம் பெற்றுவிட்டார்கள் என்று கரு முடியாது. இடைக்கிடை இப்படிப் பேசிக்கொண்டாலும் அவர்களது அடிப்படை வேதம் இனவாதம் தான்.

இனப்பிரச்சனைக்கான ஒரேயொரு தீர்வு ஈழம்தான் என்ற கரு ஈழமக்களிடையே வலுத்துக்கொண்டு வருகின்றது. இதற்குப்பல காரணங்கள் உண்டு. ஒன்று, ஈழப்பிரதேசங்களில் நடத்தப்படும் இனக்கொலைகள் அடுத்து பௌத்தபிக்குமாரின் தீவிர சிங்களவாதம். தீயை வளர்க்கும் முயற்சியைத்தான் சிங்கள அரசியல்வாதிகளும் புத்தபிக்குகளும்செய்துகொண்டிருக்கின்றனர். எண்ணையை ஊற்றுகின்றோமா அல்லது தண்ணீரை ஊற்றுகின்றோமா என்பதில் அவர்களுக்குத் தெளிவில்லையா? உண்மை இதுதான். தண்ணீர் என்று நினைத்துஎண்ணையைத்தான் ஊற்றிக்கொண்டுள்ளனர். எண்ணைக்கும் நெருப்புக்கும் உள்ள உறவு வளர்கின்றது.

இராணுவத்தை ஈழப்பிரதேசங்களுக்கு ஏவிவிட்டு தீவின் பொருளாதாரம், வெளிநாட்டு உதவிகள் பாதிப்படைகின்றது என்று பல்லவி பாடுவதில் எந்தப்பலனும் இல்லை. இலங்கையரசின் இனவெறிக்கொள்கையில் மாற்றம் ஏற்படாது இருக்கும்மட்டும் இந்தப்பாதிப்புக்கள் தொடரும். தமிழ்பேசும் மக்களின் பொருளாதாரத்தை முதலில் அரசு சிதைத்தது.ஏன், சிதைத்துக்கொண்டிருக்கின்றது. ஆனால், தனது பக்கத்திலும் பாதிப்புக்கள் ஏற்படும் என்றதை இப்போது கொஞ்சமாவது உணரத்தொடங்கியிருக்கின்றது.

www.tamilarangam.net



இலங்கை அரசிற்கு இன்று ஏற்பட்டு வரும் நெருக்குவாரங்கள் எமக்கு கிடைக்கும் வெற்றிகளாகும். இந்த நெருக்குவார நிலைமைக்குத்தக்க தந்திரோபாயங்களை உருவாக்குவதில் போராளிகள் தரப்பு அதிக கவனமும் சிரத்தையும் காட்ட வேண்டியது அவசியம்.

## நீ தலைமை ஏற்றாக வேண்டும்

எளிமையிலும் எளிமையானதைக் கூட கற்பாயாக
காலம் முன்னமே கனிந்து விட்டது உனக்கு
நேரம் கடந்ததே என்று நினைப்பே கூடாது
'அ'னாவும் 'ஆ'னாவும் கற்பாயாக

அது போதாதுதான்
ஆனாலும் கற்பாயாக
அதை நினைத்து மனந்தளராதே
தொடங்கி விடு
நீ அனைத்தையும் அறிந்தாக வேண்டும்
நீ தலைமையை ஏற்றாக வேண்டும்

அநாதை விடுதியில் இருப்பவனே கற்பாயாக
சிறையில் இருப்பவனே கற்பாயாக
சமயலறைப் பெண்ணே கற்பாயாக
அறுபது வயதானவளே கற்பாயாக
வீடில்லாதவனே பள்ளியை தேடிச் செல்

குளிரில் நடுங்குபவனே
புத்தியைத் தீட்டிக் கொள்
பசித்த மனிதனே
புத்தகத்தை எடுக்க உன் கரத்தை நீட்டு
அது ஓர் ஆயுதம்
நீ தலைமை ஏற்க வேண்டும்.

கேள்வி கேட்க அஞ்சாதே-சகோதரனே
எளிதில் ஒப்புக் கொண்டு விடாதே
நீயாகப் பார்த்து தெரிந்து கொள்
நீயாகப் புரிந்து கொள்ளாத ஒன்று
உனக்குத் தெரியாததே ஆகும்.

கணக்கை எல்லாம் கூட்டிப்பார்
கொடுத்துத் தீர்க்க வேண்டியவன் நீயே
ஒவ்வொன்றின் மேலும்
விரலை வைத்துக்கேள்
இது எப்படி இங்கே வந்தது?
நீ தலைமை ஏற்றாக வேண்டும்

***பெட்டோச் பிறெக்ட், ஜெர்மானியகவி***

# இவர்கள்

சிறுகதை

ஞாயிற்றுக்கிழமையாகையால் எல்லோருமன்று ரூமுக்குள்ளேயே இருந்தனர். பரிசைப்பொறுத்தவரையில் அது ஒரு வசதியான ரூம் தான். இரண்டு அறைகள். அதைவிடக் குளியல் அறையும் பிறம்பாகவிருந்தது. ஒரு அறையின் மூலையில் பிள்ளையார், லக்சுமி, முருகன் படங்களும் கீழே ரீ.வீ டெக் ரேப்றெக்கோடர் இன்னும் பல பொருட்களும் விருந்தாளிகளும் வந்திருந்தபடியால் ஒரு சிறிய ரீப்போவை விஸ்கிப்போத்தல், கொக்கோக்கோலாப்போத்தல் கிளாஸ்கள் எல்லாவையும் அலங்கரித்தன.

அறையின் ஒரு மூலையில் இரவு வேலைசெய்த அலுப்பில் இன்னமும் எழும்பாமல் குணம் படுத்திருந்தார். றெஸ்ரோரன்ற் வேலை அவரை நன்றாக வாட்டிவிட்டது. ஓரளவு வசதியான குடும்பத்தில் பிறந்தவன். G.C.E O/L வரை படித்துவிட்டு இரண்டு அக்காமாரையும் கரை சேர்ப்பதற்காக ஏழுபத்தெட்டிலேயே பரிசுக்கு வந்துவிட்டான். இங்கு அவனுடைய அகதி விண்ணப்பங்களெல்லாம் நிராகரிக்கப்பட்டு விட்டன. மூன்றுமுறை கனடாவிற்குப் புறப்பட்டுத் தோல்வி கண்டபின் மீண்டும் பரிசில் அவனது வாழ்க்கை தொடர்கிறது.

வாழ்கிறார். இவருக்கு மனைவியும், மூன்று குழந்தைகளும் இலங்கையில் உண்டு. ஐந்து வருடங்களாகக்குடும்பத்தைப் பிரிந்து வாழ்கிறார். சொந்த மனைவியின் நடத்தை சரியில்லை என்று யாரோ சொல்லக் கேள்விப்பட்டு இப்போ விஸ்கியுடனே குடும்பம் நடத்துகிறார்.

மற்றவர் வாசு. இலங்கையில் இருந்து வந்து இரண்டு கிழமைதான். அங்கு கடை ஒன்றில் வேலை பார்த்தவர். துரையருக்குத் தம்பி முறை. சிலோனிலேயே அதுவும் பதினாறுக்கு வயசிலேயே

பனங்கள்ளு ருசி பார்த்தவர்.

துரையர், வாசு, வயிரவர் தேவியக்காவின் சுண்டலுடன் விஸ்கியை சுவைத்துக்கொண்டிருந்தனர். அடிக்கடி ரெலிபோன் மூலமாகவோ நேரிலேயோ கதைத்துக்கொண்டிருந்தபடியால் அவர்களிடம் அதிகம் கதைப்பதற்கு விடயம் இருக்கவில்லை. எனவே பொழுதைப் போக்குவதற்காக 'காட்ஸ்' விளையாட ஆரம்பித்தனர். காட்ஸ் ஆட்டம் சுவையாகப் போய்க்கொண்டிருந்த வேளையில் கணேசர் என்பவர் வந்து சேர்ந்தார். கணேசர் திடீரென வந்த விருந்தாளி. கணேசரைக்கண்ட தேவியக்கா கதைத்துக்கொண்டே ஒருபேணி அரிசியை மேலும் எடுத்து உலைக்குள் போட்டா. கணேசர் அடுத்த மெற்றோவில் தான் இருப்பவர். குணத்தின் நண்பர். கொஞ்சம் படிச்சவர் மாதிரித்தான். சிலோனில் BANK ல் வேலை செய்ததாகக் கூறிக்கொள்ளுகிறார். இவருக்குக் காட்ஸ் விளையாட அவ்வளவாகத் தெரியாது. இருந்தாலும் நன்றாக ரசிப்பார். வந்தவருக்கு விஸ்கி பரிமாறப்பட்டது. கணேசர் விஸ்கிக் கிளாசுடன் வயிரவருக்குப் பக்கத்தில் குந்திவிட்டார். ஆட்டம் இப்போது விஸ்கியுடன் சேர்ந்து கலகலப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஒரு போத்தல் காலியாகவே துரையர் கணேசரை ரெக்சி இன்னொரு போத்தலும் எடுப்பித்து விட்டார்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

[illegible]
விளங்காத காரணத்தால் சவுண்ட் குறைக்கப்பட்டு றேப்றெக்கோடரில் பழைய சினிமாப்பாடல் ஒலித்துக்கொண்டிருந்தது. வழமை போல் அன்றும் ஞாயிற்றுக்கிழமைக்கொண்டாட்டம் ஆரம்பமாகி இருந்தது. ரூம் சொந்தக்காரர் துரையர் விஸ்க்கிப்போத்தலை உடைத்து ஆரம்பித்து வைத்தார்.

துரையருக்கு வயது நாற்பது இருக்கும். சிலோனில் தோட்டம் தான் செய்தவர். மணமானவர். இங்கு பீரோகினிங் (அலுவலகங்களைத் துப்பரவாக்கல்) செய்கிறார். பரிசுக்கு வந்து ஒன்றரை வருடம்தான். துரையரின் கடுமையான முயற்சியால் மனைவியையும் கூப்பிட்டுவிட்டார். இதுவரையில் பிள்ளைகள் இல்லை. மனைவிதேவி அக்கா பரிசுக்கு வந்து ஒருமாதம் தான். அவ தனது சோகம் நிறைந்த பயணக்கதைகளை ஒருமாதமாகியும் சொல்லி முடிந்தபாடில்லை. இருந்தும் கணவனுடன் இருப்பதில் ஒரு பூரிப்பு. தேவியக்கா விஸ்கிக்கு றோஸ்ட் ஆகச் சுண்டல் தயாரித்துக்கொண்டிருந்தா இவர்கள் இருவருடன், குணமும், ஜெகனும் அந்த ரூமிலேயே வசித்து வந்தனர். ஜெகன் தேவியக்காவின் தம்பி. பரிசுக்கு வந்து இரண்டரை வருடங்கள். ஜெகன் காட்காரன். துரையருக்கு முன்னால் தண்ணி அடிப்பதில்லை. மச்சான் என்ற ஒரு மரியாதை அவ்வளவு தான். இப்போ அக்காவும் வந்துவிட்டபடியால் அவன்பாடுபெரும் திண்டாட்டம்.

இவர்களைவிட வயிரவர், வாசு இருவரும் ரூமுக்கு வந்திருந்தனர். வயிரவருக்கு 30 வயதிருக்கும். வயிரவர் என்பது பட்டப்பெயர் தான். இவரது சொந்தப் பெயர் சோமலிங்கம். ஆள் நல்ல கறுப்பாக இருந்தபடியால் இவரது நண்பர்கள் சோமலிங்கத்தினை அன்புடன் வயிரவர் என்று அழைப்பார்கள். சோமலிங்கம் என்றால் அநேகருக்குத் தெரியாது. வயிரவர் என்றால்த்தான் தெரியும். வயிரவர் சிலோனில் வியாபாரம் செய்தவர். பின் சவுதியில் 3 வருடங்கள் வேலை செய்துவிட்டு இப்போ பரிசில் அகதி என்று

தேவியக்காவின் சமையற் புகையும், மற்றவர்களின் சிகரெட் புகையும் ஒன்றுடன் ஒன்று சங்கமமாகி அறை புகை மண்டலமாகவே காட்சியளித்தது. குணம் அப்போதுதான் படுக்கையை விட்டெழுந்து முகம் கழுவியவன் தேநீருக்குப் பதிலாக விஸ்கியை எடுத்துக் கொண்டான்.

கொண்டாட்டம் அமர்க்களமாகவே நடந்துகொண்டிருக்கையில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. கதவு தட்டப்படும் சத்தம் கேட்டதும் திறந்துகூடப்பார்க்காமலே கணேசர் சொன்னார் 'உது உங்கை இயக்கப்பொடியள் காசு சேர்த்துக்கொண்டு திரியினம்' அவைதான் தட்டுகினம்' என்று உடனே துரையர் "ஒருதரும் கதவைத் திறக்கவேண்டாம். எல்லோரும் சத்தம்போடாமலிருங்கோ"-என்று மெதுவாகச் சொல்லிவிட்டு தானும் அமைதியாகினார். சிறிது நேரத்தில் அமர்க்களமாய் இருந்த ரூம் அமைதியாயிற்று. கதவைத் தட்டியவர்கள் மீண்டும் ஒருமுறை தட்டிவிட்டு நாகரீகமாகத் திரும்பிவிட்டார்கள். அவர்கள் திரும்பியதை யன்னலூடாகப் பார்த்து ஊர்ஜிதம் செய்துகொண்ட கணேசர் தனது சாகசத்தைப்பற்றிப் பெருமையடித்துக் கொண்டார்.

இச்சம்பவத்துடன் கூட்டைக் கையில் வைத்தபடியே இயக்கங்கள் பற்றிய விமர்சனங்கள் விஸ்கியினூடே அனைவராலும் பரிமாறப்பட்டது. 'உவங்கள் பச்சைக் கள்ளரடா' உவங்களுக்குக் காசைக் கொடுக்க எனக்கென்ன விசரே'-என்று வந்தவர்களை யாரென்றுகூடப் பார்க்காமலே இறுமாப்போடு சொன்னார் துரையர். துரையரின் இந்தப் பேச்சு உண்மையில் அயோக்கியத்தனமானது. ஏனெனில் அவருக்கு வந்தவர்கள் யாரென்றும் தெரியாது. ஆனால் பச்சைக் கள்ளர் என்கிறார் இவருக்கு இவரது செய்கை மனட்சாட்சியை உறுத்த சிறிது நேரத்திற்கு முதல் தான் செய்த சாதுரியமான செயல் என்று கருதும் செய்கையை நியாயப்படுத்தவே இப்படிக் கூறியிருக்கிறார்.

www.tamilarangam.net

"உண்மைதான் அண்ணை ஆருக்கொரு இயக்கம் வயிற்றுப்பிழைப்புக்கு வழி தேடிக்கொண்டு திரியினம்" தொடர்ந்தார் BANKAR கணேசர். இவர் மட்டுமல்ல இவரைப்போல் கன படிச்சவர்கள் பரிசில் இருக்கிறார்கள். பிரச்சனைகளுக்குப் பயந்து நாட்டைவிட்டு ஓடிவந்து இன்று பிரச்சனைகளே வெறும் செய்தியாய்ப் போனவர்கள். வாய்க்கு வந்தபடியெல்லாம் கதை அளப்பார்கள். தாங்களும்

வயிற்றுப்பிழைப்புக்காகவே ஓடிவந்தபடியால் எல்லா விடயத்தையுமே அதே நோக்கிலே சிந்திப்பவர்கள். ஈழப்போராட்டத்தைப் பற்றி வெறும் பொழுதுபோக்காக மட்டுமே அதுவும் இயக்கங்களினது பிழைகளை மட்டும் கதைத்துக்கொள்வார்கள். எங்காவது ஒரு இயக்கம் விடும் பிழை இவர்களுக்குக் கிடைத்துவிட்டால்போதும் 'வாய்க்கு அவல்'தான். போகிற இடமெல்லாம் மென்றுகொண்டே திரிவார்கள். நாங்கள் எவ்வளவு கெட்டிக்காரர்கள் இயக்கமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்என்று ஏதோ தொலைநோக்குப் பார்வையுடன் ஏற்கனவே ஒதுங்கிக்கொண்டவர்கள் மாதிரி நடந்துகொள்வார்கள். தம்மை ஏதோ குருட்டுத்தனமாக நியாயப்படுத்தவும் முற்படுவார்கள். இவர்களின் சுயாத்தன்மையும் மொத்தத்தில் வடிகட்டிய சுயநலமுமே இவர்கள் இயக்கங்களை நாடாமல் இருப்பதற்குரிய அடிப்படைக் காரணம் ஆகும்.

"அண்ணை எங்கடை சாந்தலிங்கத்தின்ரை தம்பி, அவனும் இயக்கத்தை விட்டு வெளிக்கிட்டு வந்து இந்தியாவிலை நிற்கிறனாம்.. கனடாவுக்குப்போகிறதுக்கெண்டு"-கதையினூடே புகுந்தார்வயிரவர். "எட இவன் உருத்திரன். பேய்க்காயல்லே!..லெபனனில் எல்லாம் போய் ரெயினிங் எடுத்தவன்." ஜெகனுக்குச் சந்தோசம் தங்களின் வாய்க்கு அவலும் தங்களின் கூட்டமும் பலம் பெறுகிறதென்று இப்படி மாறிமாறி இயக்கங்கள் பற்றிய விமர்சனங்கள் மோசமாகிக்கொண்டுபோக தேவியக்காவிற்குக் கோபம் ...

துரையர் வயிரவர் போன்றவர்களெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு காலத்தைக் கழிக்கின்றார்கள். ஊரோடை ஒத்ததுதானே எங்களுக்கும் என்ற பரந்துபட்ட மனப்பான்மையில் வாழ்கிறார்கள். உண்மையில் பரிதாபத்திற்குரியவர்கள். தங்களின் எதிர்காலம்பற்றிப்பரந்துபட்டுச் சிந்திக்க முடியாதவர்கள். ஏதோ காசு இருந்தால் எதையும் செய்யலாம் என்ற அசட்டுத்தனமான நம்பிக்கையில் தமது இரத்தங்களை விற்று உழைக்கிறார்கள். முதலாளித்துவப் பொழுதுபோக்குச் சாதனங்கள் இவர்களின் மூளையை நன்றாக மந்தமாக்குகின்றது.

தரங்கெட்ட சினிமாப்படங்கள், நைற்கிளப், விஸ்கி, பியர், .. பொழுது இன்பமாகக் கழிகிறது. இவர்களைப்பொறுத்தவரையில். நேரம் நாலுமணியை எட்டும்போதுதான் துரையருக்குச் சாப்பிடவேண்டும் என்ற ஞாபகம் வந்தது. குணம் எல்லோருக்கும் சாப்பாடு பரிமாறினன். குணம் கொஞ்சம் நிதானமாக இருந்தான். தேவியக்கா சமைத்துவிட்டுச் சாப்பிடாமலே போய்ப் படுத்துவிட்டா. வாசு மூன்றுமுறை வாந்தியெடுத்துவிட்டு படுத்து நித்திரையாகிவிட்டான். துரையரும் வயிரவரும் நிலம் பாதி தாம் பாதியாக ஒருவாறு சாப்பிட்டு முடித்தனர். திடீரென வயிரவர் ஏதோ ஞாபகம் வந்தவர் போல நாளைய வேலையை நினைத்தாரோ என்னவோ, எல்லோரும் இருங்கோ நான் வாறன் என்று கூறிவிட்டு மெற்ரோவை நோக்கி மெதுவாகத் தள்ளாடியபடியே நடந்தார்.

------ முற்றும் ------

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கொண்டு வந்துவிட்டது. அண்மையில்தான் இலங்கையிலிருந்து வந்திருந்தபடியால் அவவில் கொஞ்சம் போராட்ட வாடை அடித்தது "நீங்கள் இஞ்சை இருந்துகொண்டு கண்டபடி கதையாதையுங்கோ. அங்க பொடியங்கள் இல்லையெண்டால் யாழ்ப்பாணத்தில் ஒரு சனங்கூட மிஞ்சாது, அது தெரியுமோ உங்களுக்கு. அதோட அங்கை வடக்கத்தையாரெண்டு இந்தியாக்காரச் சனங்களை நாங்கள் படுத்தினபாடு, இண்டைக்கு இந்த நாட்டிலை அதைவிட மோசமாய் எங்கடை சனங்கள். இதுகளைப்பற்றி யோசியாதையுங்கோ,

யக்கறியையும் கொழுவி சப்பாத்தையும் மாட்டிறுப்போலை ....." என்ற ஆவேசத்தில் முடிக்கமுடியாமல் இழுத்தா தேவியக்கா.

"பொத்தடி வாயை" துரையருக்கு வெறி ஏறிவிட்டது. தேவியக்காவும் பயத்தில் வாயை மூடிக்கொண்டு சமையலில் கவனத்தைச் செலுத்தின.

நேரம் மாலை 3 மணியாகியிருந்தது. தேவியக்காவின் பேச்சுஎல்லோரையும் கொஞ்சம் தாக்கவே செய்தது. அத்துடன் இயக்கக் கதைகள் நிற்பாட்டப்பட்டு காட்ஸ் விளையாட மறுபடி ஆரம்பித்தனர். விளையாட்டில் முன்பிருந்த உற்சாகம் இப்போ இருக்கவில்லை. துரையர் ஏதோ எரிச்சலில் தன்பாட்டிலே ஓடிக்கொண்டிருந்த ரீ.வீயை நிற்பாட்டினர். இப்போது றேப் றக்கோடர் மட்டும் பாடிக்கொண்டிருந்தது.

உண்மைதான் தேவியக்கா வந்து ஒரு மாதத்திற்குள் இந்தச் சிறிய உண்மையைத்தான் உணர்ந்துவிட்டா. தமிழ் மக்களின் நிலை வெளிநாடுகளில் வரவர மோசமாகிக்கொண்டே போகிறது. வெளிநாட்டு அரச நெருக்குவாரங்களும் ஏன் அந்நாட்டு மக்களாலேயும் வெறுக்கப்படுகின்ற இன்றைய நிலையும் மோசமாகிக்கொண்டே போகின்றது.

தோழர்களே!

'ஈழப்போராளி', 'குமுறும் எரிமலை'

மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இதர வெளியீடுகளைப் பெறுவதற்கும், EPRLF உடன் இணைந்து ஈழப் போராட்டத்திற்கான உங்கள் வருமான ஒத்துழைப்பை செய்வதற்கும், EPRLF ன் வார்த்தைகளை உங்கள் அறிந்து ஆதரவுகளையும் வழங்கவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரான்ஸ் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள். அனைத்துத் தொடர்புகட்கும்....

EPRLF (FRANCE)
10, RUE DES MARTYR
75009-PARIS.

தொலைபேசி 487-49-830.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கின்றனர். கிராமப்புறப் பெண்தொழிலாளர்கள் அநேகமாக ஏ றிசி அல்லது எம்என்எல்எஇ போன்ற அமைப்புகளின் கருத்தரங்குகளில் வீட்டுவேலைகளின் பளு காரணமாகப் பங்குபற்றுவதில்லை. ஏ றிசி யின் திருமதி கிளாரா முருகயால்டியின் கருத்துப்படி "பெண்கள் இவைகளில் பங்கேற்பது மடத்தனம் அல்லது வழி விலகிச் செல்லும் ஒரு செயல்' எனக் கணவன்மார் பெரும்பாலும் கருதுவதால்த்தான் இப்பெண்கள் முன்வந்து கலந்துகொள்ள அஞ்சுகிறார்கள்" என்றார். ஆண்களின் தங்களின் வருமானம் உயரவேண்டும் என நினைக்கும் அதேவேளை பெரும்பாலானபெண்களோ சமூகநலன்கள் இன்னும் மேம்படவேண்டுமெனக் கருதுகிறார்கள். தங்கள் குடும்பத்தேவைக்கான பொருட்களை இலகுவாகவும் தடையின்றியும் பெற்றுக்கொள்ள நியாயவிலைக்கடைகளையும் வைத்திய வசதிகளையும் பாடசாலைகளையும் மேலும் தினசரி தண்ணீருக்காக சில இடங்களில் பல மைல் தூரம் அலைகளைத் தேடி நடப்பதைத் தவிர்க்குமுகமாக குழாய் நீர் தங்குதடையின்றிக் கிடைப்பதையுமே முக்கியமாகப் பெண்கள் எதிர்பார்க்கிறார்கள். வெவ்வேறான இந்த எதிர்பார்ப்புகள் ஏ றிசி யின் வழக்கமான முறைகளினால் கூட்டங்களிலும் மற்றும் கருத்தரங்குகளிலும் எதிரொலிக்கப்படாமல் போவதால் இத்தொழிற்சங்கம் தனது உறுப்பினர்களான அடிமட்டத்திலுள்ள பெண்கள் சிலரை விசேட பயிற்சியளித்து அதன் மூலம் பண்ணைகளிலும் மற்றும் விவசாய நிலங்களிலும் சக தொழிலாளர்களைத் தொழிற்சங்கத்தில் சேரவும் நடவடிக்கைகளில் ஈடுபடவும் தூண்டி வருகின்றது.

நிக்கரகுவாவின் பொருளாதாரம் தங்கியுள்ள துறைகளில் தொழில் செய்துகொண்டிருக்கும் தொழிலாளர் தொகையில் பெண்கள் 1979ம் ஆண்டுக்கணக்கெடுப்பின் பிரகாரம் பட்டினங்களில் ஏறத்தாழ 15%மானோராயும் கிராமப்புறங்களில் 26 சதவிகிதமானோராயும் காணப்பட்டனர். 1983ம் ஆண்டு இவ்விகிதாசாரமானது பட்டினங்களில் 41.1ஆகவும் கிராமப்புறங்களில் 48.6 ஆகவும் உயர்ந்தது. பொதுவாக 60%மான இவ்வுழைக்கும் பெண்கள் பயிற்சியேதும் பெறாத தொழிலாளர்களாக வேலைசெய்து வந்தாலும் தற்போது பயிற்சி வசதிகளை பெற்றுக்கொள்ளுவதற்கு ஏற்ற திட்டங்கள் நடைமுறையிலுள்ளன. கைத்தொழில் துறைகளில் பெண்கள் ஆண்களைவிட அதிக நிரந்தரவேலைவாய்ப்புகளைப் பெற்றிருக்கின்றஅதேவேளையில் விவசாயத்துறையைப் பார்க்கும்போது ஆண்கள் அங்கு நிரந்தர வேலைவாய்ப்புகளை அதிகம் பெற்றுள்ளனர்.

சோமோசாவின் ஆட்சிக்காலத்தின்போது பெண்களின் சம்பளமானது அவரவர்களின் கணவன்மார்களுக்கோ அல்லது வயதுவந்த ஆண்பிள்ளைகளுக்கோ அளிக்கப்பட்டுவந்தது. புதிய தொழில்சட்டங்கள் பெண்களை இப்போது நேரடியாக சம்பளப் பதிவேடுகளில் பதியும்படி வற்புறுத்துகின்றனர். பெரும்பாலான பண்ணைகளில் மின்சார, குழாய்நீர் மற்றும் சிறிய ஒய்வெடுக்கும் குடில்கள் என்பனபோன்ற வசதிகளும் வேலைசெய்யும் பெண்களுக்காகச் செய்யப்பட்டு வருகின்றன. வேலைத்தலத்திலேயே அத்தியாவசியப்பொருட்களை வழங்கும் சில்லறைக்கடைகள், மானியம் வழங்கப்படும் குறைந்த கட்டணத்திலான போக்குவரத்துசசேவை, சாப்பாடு மற்றும் வீட்டுவசதிகள் என்பன பெண்கள் தங்களின் வருமானத்தில் பெரும் பங்கை சேமிக்க வழிசெய்கின்றன. மேலும் முதன்முறையாக இப்போதுதான் பெண்களுக்கு 12 மாத மகப்பேற்றுகால லீவும் கண்டிப்பான வேலைநீக்கங்கள், பாலியல் ரீதியான பாகுபாடு காட்டுதல் முதலியவற்றிற்கெதிரான பெண்களுக்கு ஆதரவளிக்கும் சட்டஆலோசனைகள், சேவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விவசாயச் சீர்திருத்தம் சம்பந்தமாக 1981ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சட்டத்தின்படி பெண்கள் தங்கள் குடும்பத்தலைவி அல்லது பிரதான குடியிருப்பாளராக இல்லாமலே கூட்டுறவுச்சங்கங்களில் மற்றும் இது போன்ற அமைப்புகளின் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். கூட்டுறவு சம்பந்தமாக யாக்கப்பட்ட இன்னோர் சட்டமும் பெண்களுக்கும் ஆண்களைப்போன்றே இத்துறையில் சமசந்தர்ப்பம் சம உரிமை யாவும் வழங்கப்பட வேண்டுமென வற்புறுத்துகின்றது. எனினும் 1981ம் ஆண்டின் பின்னர் அமைக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகளில் 44சதவீதமானவையே பெண்களை உள்ளடக்கியிருக்கின்றன. அத்தோடு இவ்வமைப்புகளின் மொத்த உறுப்பினர் தொகையில் கிட்டத்தட்ட 6சதவீதமானோரே பெண்களாவர்.

தப்பபிப்பிராயங்கள் குறைகின்றன.

கூட்டுறவு நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று நோக்கில் வேறுபடுகின்றன. ஒன்றுக்கொன்று லா.கொன்கோடியா என்ற ஒரு இடத்திலுள்ள கூட்டுறவு அமைப்பிலான பண்ணையொன்றில் பெண்கள் வீட்டுள்ளேயே இருந்து பிள்ளைகள் புடைசூழ வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வீட்டுக்கு வெளியே வருவது மிகவும்குறைவென்பதால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றுவதையோ, வயதுவந்தோருக்ககான கல்வியூட்டும் வகுப்புகளில் கலந்துகொள்வதையோ எதிர்பார்க்கலாமா? இதற்கு நேர்மாறாக 'பன்தாசா' என்ற இடத்திலுள்ள "குவன் கால்தீஸ்பினல்கா" என்ற கூட்டுறவுப் பண்ணையில் பெண்களே வெற்றிகரமாகச் சகல வேலைகளையும் பொறுப்பேற்று நடத்திவருகின்றனர். ஒக்டோபர் மாதம் 1983ம் ஆண்டு இங்குள்ள சகல ஆண்களையும் கொந்ராக்கனி கொன்றொழித்ததனால் பெண்களே பொறுப்பை ஏற்கும்படியான நிலமை ஏற்பட்டாலும் தற்போது இப்பண்ணை வெற்றிகரமாக நடத்தப்பட்டு வரப்படுகின்றது.

அரசாங்கப் பண்ணைகளிலும் தனியார் பண்ணைகளிலும் இன்னும் சிற்சில சட்டமீறல்கள் இடம்பெற்றாலும் பெண்விவசாயத்தொழிலாளர்கள் படிப்படியாக முக்கிய பங்கினை வகிக்குமளவிற்கு முன்னேறி வருகின்றன. எப்படியிருப்பினும் விவசாயத்துறையில் நிரந்தரமானதும் பாரம்பரியமானதுமான தொழில்களுக்குப் பெண்கள் தெரிந்தெடுக்கப்படுவது குறைந்து சமயாசமயத்தொழிலாளர்களாகவே பெண்கள் இப்போதும் வேலைக்கமர்த்தப்படுகின்றனர். ஏரிசி யின் திருமதி கிளாரா முருகயால்டி யின் கருத்தின்படி "சில வேலைகொள்வோர் பெண்களால் சில வேலைகளைச் செய்ய முடியுமெனக் கற்பனை செய்துகூடப் பார்ப்பதில்லை" யெனத் தெரிகிறது. ஆண்கள் அரசாங்கப் பண்ணைகள், கூட்டுறவுப்பண்ணை அமைப்புகள் போன்றவற்றிலிருந்து வேறு தேவைகட்காகத் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பப்படும் போது பெரும்பாலும் பெண்களே அவ்வெற்றிடங்களை நிரப்பிவருகின்றனர். தினசரி போரால் அல்லோலகல்லோலப்படும் நிக்கரகுவாவின் முதலாவது பிரிவில் புகையிலை உலர்த்துதல், நீர்பாய்ச்சுதல் வேலைகளைப் பெண்களே செய்கின்றனர் இந்நிலமை மாற்றம் பற்றி ஏரிசி யின் திருமதி கிளாரா முருகயால்டி கூறுகையில் "முன்னர் ஒரு பெண் இரவு நேரங்களில் தோட்ட வேலைகளிலோ வேறு நடவடிக்கைகளிலோ ஈடுபட்டால் அவள் கற்பழிக்கப்படும் ஆபத்தையோ அல்லது விபசாரியென்று தூற்றப்படும் நிலைமையையோ எதிர்நோக்கவேண்டியிருந்தது. என்றாலும்இப்போது தேவைகள் வற்புறுத்துகின்ற காரணத்தால் பெண்கள் பாரம்பரிய மற்ற வேலைகளான உழவு வண்டி ஓட்டுதல் போன்ற தொழில்களையும் செய்வதால் முன் குறிப்பிட்டதைப்போன்ற தப்பபிப்பிராயங்கள் யாவும் வலுவிழந்து

www.tamilarangam.net



பிரிவுக்குப் பிரிவு பெண்களின் நிலைமைகளில் முரண்பட்ட தன்மைகள் காணப்படுவ தைப்போலவே பட்டினங்களுக்கும் கிராமப்புறங்களுக்குமிடையில் இவை காணப்ப டுகின்றன. கைத்தொழில் துறையில் பாரம்பரியமற்ற தொழில்துறைகளில் பெண் கள் புகுவது விவசாயத்துறையை விடவும் மெதுவாகவே இருக்கிறது. "பட்டினங்க ளில் வாழும் பெண்கள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பெரும் பங்கு ஆற்றி வருகிறார்கள்" எனக் கூறும் எஸ்என்எல்எஇ யின் பிரதிநிதியான திருமதி ஏஞ்சலா ரோசா எஸ்விடோ மேலும் கூறுகையில் பட்டினப் பெண்கள் கிராமப்புறப் பெண்க ளைவிடவும் படிக்க, வேலை செய்ய மற்றும் பாதுகாப்பு, உற்பத்தித் தொழில் துறைகளில் பங்கேற்க அதிக வாய்ப்புகள் உள்ளன" எனத் தெரிவித்தார்.

உண்மையாகவே 1983ம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி பல்கலைக்கழ க மாணவர்களில் 46 சதவீதத்தினர் பெண்களாயிருந்தனர். விஞ்ஞானத்துறைகளில் 70 சதவீத மாணவர்கள் பெண்களாகவும் அதன் பிரிவுகளான வைத்தியத்துறையில் அரைப்பங்கும் மேலும் பொறியியல் துறையில் மூன்றிலொரு பங்குமாகப் பெண் மாணவர்களைக் கொண்டிருந்தது. சமூகவியல் பீடத்தின் தலைவராக மத்திய அமெ ரிக்கப்பல்கலைக்கழகத்திலுள்ள திருமதி அமாலியா சாமேனோ கருத்துத் தெரிவிக் கையில் இளம் ஆண்கள் போருக்கென அனுப்பப்படுவதால் தனது மாணவர்களில் 70 சதவீதமானோர் பெண்களாக இருக்கிறார்கள் என்று தெரிவித்தார். அவர் மேலும் கூறும்போது "போர் முடிந்தவுடன் ஒரு அதிர்ச்சி ஒன்று காத்துள்ளது. போர்முனையிலிருந்து திரும்பிவரும் ஆண்கள் பெண்களே ஆக்கிரமித்துள்ள நிர்வாக மற்றும் தொழில்துறைகளைக் காணும்போது என்ன செய்வார்களோ என்றார்.

போரின் மற்றொரு பக்கவிளைவு வர்த்தகத்துறையில் பெருமளவு(60%) பெண்கள் சேர்ந்து வருவதாகும். 1982ம் ஆண்டில் மட்டும் 30,000 தொழிலாளர்கள் விவசாயத்துறையை விட்டு வர்த்தகத் துறைக்கு வந்திருக்கிறார்கள். அத்துடன் இவ் விளைவு மேலும் அதிகரித்தவண்ணமேயுள்ளது. வர்த்தகத்துறை பட்டின வாசிகளான பெண்களைக் கவர்ந்ததில் வியப்பேதுமில்லை. ஏனெனில் இதில் தொழில் புரியும் போது வீட்டு நிர்வாகத்தையும் அல்லது வீட்டு வேலைகளையும் சேர்த்து கவனிக் கலாம் என்பதே காரணம். தலைநகரான மொனகுவாவின் நிலையைப் பார்க்கு கின்ற போது பெரும்பாலான மொத்த சில்லறைக் கடைகளை நடத்துபவர்கள் பெண்களே, மேலும் பல பெண்கள் குடும்பங்களில் வீட்டு ஆயாக்களாகவும் சிறிய வர்த்தக நிலையங்களை அதாவது சலவைசெய்யும் நிலையங்கள், பழுதுபார்க்கும் கடைகள் என்பவற்றை நடத்தியும் வருமானம் பெறுகிறார்கள்.

புரட்சி நடைபெற்றவுடன் வீடுகளில் வேலைசெய்யும் ஆயாக்கள் வேலைக்காரர் போன்றோர் தங்களுக்கென ஒரு தொழிற்சங்கம் அமைத்துக் கொண்டதோடு வேலை நேரங்களைக் குறைத்துக்கொண்டும் சம்பளத்தை அதிகரித்துக்கொண்டும் வேலைக்காப்புறுதி மற்றும் சமூக நலன்களைப் பெற்றும் வந்துள்ளனர். எப்படி யிருந்தபொழுதிலும் இன்னும் சிறிய அளவிலான சுரண்டல் நடந்து வருகின்றதெனினும் பெண்களே இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அத்தோடு பொருட்கள் தட் டுப்பாடு ஏற்படும்போது பெண்களுக்குப் பிரச்சனை அதிகமாகிறது. பெண்கள் த மது பெரும்பாலான நேரத்தைத் தேவைப்படும் பொருட்களைத் தேடி வாங்குவ தில் வீணாக்குகின்றனர். அரசாங்கத்தால் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதுக்குதல், கறுப்புச்சந்தை, கொள்ளைலாபமடித்தல் போன்ற தீய வர்த்தக துர்ப்பழக்கங்களை எதிர்பார்த்த அளவிற்கு குறைக்கவில்லை.

சந்தோசப்படக்கூடிய இன்னோர் அம்சம் என்னவெனில் நடைபெறும் போரின்காரணமாக உற்பத்தித் தொழில்துறைகளில் பாதுகாப்புத் துறையிலும் பெண்களின்பங்கு மேலும் அதிகரித்தவண்ணம் உள்ளதுதான். ஆய்வாளர்களின் கூற்றுப்படி லத்தீன் அமெரிக்காவிலுள்ள எந்தவொருநாட்டினதும் ஆயுதப்புரட்சியை விடவும் நிக்கரகுவாப் புரட்சியின்போதே பெண்களின் சக்தி அதிகம் பயன்பாடு அடைந்தது எனத் தெரிகிறது. ஆயுதப்படைகளில் பெண்களின் பங்களிப்பு இன்னும் ஒரு முக்கிய இடத்தினை வகித்து வருவது இக்கூற்றை மேலும் தெளிவாக்குகிறது. சிறிது காலத்துக்கு முன்பு 17 - 22 வயதிற்குட்பட்ட சகல இளம் ஆண்களுக்கும் இரண்டுவருடக் கட்டாய இராணுவசேவைச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது ஏஎம்என்எல்ஏஇ 'அச்சட்டம் இளம் ஆண்களுக்குப்போலவே இளம் பெண்களுக்குமானதாயிருக்க வேண்டுமென' நாடளாவிய பெரும் பிரச்சாரத்திலீடுபட்டது. எனினும் இவ்வமைப்பின் நெறியாளர் குழுவைச் சேர்ந்த திருமதி பட்ரிசியா லிண்டா என்பவரின் கூற்றுப்படி இப்போக்குப் பின்னர் சிறிது சில காரணங்களின் நிமித்தம் மாற்றப்பட்டது. இதுபற்றி அவர் விளக்குகையில் "நிதர்சன நிலைமைகள் ஒரு பெண்ணைத் தன்குழந்தைகள், மற்றும் வயது முதிர்ந்த பெற்றோர் ஆகியோரை விட்டு கட்டாய இராணுவ சேவைக்குச் செல்ல அனுமதிக்காத" பட்சத்தில் பெண்கள் தாங்களாகவே விரும்பினால் இச்சேவைக்குச் செல்லலாம் என்ற முடிவை நாங்கள் எடுத்தோம்" என்றார்.

எனினும் இப்போது சிறிய தொகையினரான பெண்களே போர்முனைக்குச் செல்ல விரும்புகின்றார்கள். ஏஎம்என்எல்ஏஇ யின் மொனகுவா மாவட்டத்துக்குப் பொறுப்பான திருமதி இசாபெல் அருமூள் என்பவர் இந்நிலைமையைப்பற்றிக் கூறும்போது பெண்களுக்கும் ஆண்களைப்போலவே இராணுவத்தில் ஒழுக்கம், கடமைகள் என்பன உண்டு. என்றாலும் இயற்கையாகவே பெண்களுக்கு ஆண்களின் உடற்பலம் இல்லை ஆதலினாலும் இராணுவத்தில் ஒரு பெண் இடும் கட்டளைகளை ஆண் இராணுவ வீரர்கள் பெரும்பாலும் விரும்புவதில்லை. எனவே பெண்கள் தொழிற்சாலைகள் பண்ணைகளில் ஆண்கள் செய்யும் வேலைகளைப் பொறுப்பேற்று அவ் ஆண்களைப் போர்முனைக்கு அனுப்புவதையே விரும்புகிறோம். இரவு நேரக்காவல் மக்கள் பாதுகாப்பு அரண்கள் என்பவற்றில் கடமைகளிலீடுபட்டும் புரட்சியின் மகத்துவத்தினை பாதுகாக்கின்றோம் என்று விளக்கினார்.

மேலும் அதிகரித்து வரும் தன்னம்பிக்கை.

தேசிய பால் ஊட்டுதல், சுகாதாரம் மற்றும் உடல்நலக் கல்வி போதித்தல் என்பனவற்றில் ஈடுபட்டிருக்கும் 80ஆயிரத்துக்கும் அதிகமான தொண்டர்களில் 75%த்தினர் பெண்களாயிருக்கும் அதேவேளை பட்டினப்புறங்களில் வயது வந்தவர்களுக்குக் கல்வியூட்டும் ஆசிரியர் தொகையிலும் 50%த்தினர் பெண்களாயுள்ளனர். நிக்கரகுவா தாக்கப்பட்டு ஆக்கிரமிப்புகளேடுமாயின் ஆயிரமாயிரம் பெண்கள் மக்கள் பாதுகாப்பு அரண்களில் போர்க்கடமைகளைக் கையேற்கத் தயாராயுள்ளனர். ஏற்கெனவே, இரவு நேரக் காவல்க் கடமைகளை செய்துவரும் காவலர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களில் பெண்கள் 60 முதல் 70 வரையிலான பங்கினராக இருக்கிறார்கள். தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுப்புறங்களை நாசவேலையிலிருந்து பாதுகாப்பதே இக்காவலர்களின் பிரதான கடமையாகும்.

மென்மேலும் பெண்கள் பயிற்றப்பட்ட மற்றும் உயர்ந்த பதவிகளை வகிக்கும்போது தங்களைப்பற்றி அதிக தன்னம்பிக்கை கொள்வதுடன் தங்களின் உரிமைகளை மேலும் கூடிய நம்பிக்கையுடனும் ஆக்ரோசத்துடனும் கோருகிறார்கள். "நிக்கரகுவாப் பெண்கள் பல தடைகளைத் தகர்த்தெறிந்து வருகிறார்கள். எனக் குறிப்பிட்ட திருமதி ரோசா பொன்சேகா "நாங்கள் எங்களால் என்ன செய்யமுடியுமென்பதைத் தெரிந்துகொண்டோம். பேசவும் விவாதிக்கவும் உரிமைகளுக்காகக் குரலெழுப்பவும் எங்களுக்கிருந்த பயத்தை வென்றுவிட்டோம்!! என்று தொடர்ந்து சொன்னார். சான்டினிஸ்டா ஆட்சியின் தலைவர்களில் பலர் புரட்சி பெண்களுக்கான உரிமைகளைப் பபோதுமான அளவு வழங்கத் தவறியுள்ளது. என்றே இன்று கருதுகிறார்கள். "பல்வேறு தப்பபிப்பிராயங்கள், பழக்கவழக்கங்கள், மூடநம்பிக்கைகள் போன்ற தடைகளைத் தாண்டி நாங்கள் முன்னேறவேண்டியுள்ளது." எனக் கூறும் உள்நாட்டு அமைச்சரான திரு தோமஸ் பேர்ஜ் மேலும் பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் சேர்ந்தே ஒரு கடுமையான இலட்சிய வெறியுடனான போராட்டத்தை பெண்களை விடுவிப்பதற்காக வென்தைத் தொடங்கியாக வேண்டும்" எனக் கூறினார்.

-தமிழில் எஸ். ஞானச்சந்திரன்.



www.tamilarangam.net



# ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஏன் இத்தனை இயக்கங்கள்

ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஏன் இத்தனை இயக்கங்கள், தேவைதானா? ஒரே குறிக்கோளுக்காகப் போராடுபவர்கள் அதாவது சுதந்திர ஈழத்திற்காகப் போராடுபவர்கள் ஒரே தலைமையின் கீழ் இன்று போராடமுடியாதா? என்ற கேள்விகள் இன்று ஈழமக்களின் பெரும்பாலோனோரிடம் முக்கிய கேள்வியாகவும் ஒரு வித அங்கலாய்ப்பாகவும் வெளிப்படுவதைக் காணமுடிகின்றது.

குறுகிய கால ஈழப்போராட்ட வரலாற்றில் எத்தனையோ விடுதலை இயக்கங்கள் தோன்றிவிட்டன. தோன்றிக்கொண்டிருக்கின்றன, தோன்றிய சில இயக்கங்கள் சுவடே தெரியாமலும் போய் இருக்கின்றன.

இலங்கைத்தீவிலே ஈழப்போராட்டமானது நடைபெற வேண்டியிருப்பது ஒரு துர்ப்பாக்கிய நிலையே, இலங்கையிலே சரியான முற்போக்கு இடதுசாரிகள் இல்லாதிருந்தமையே இதற்குக் காரணமாகும். இதைப் பயன்படுத்தி தமிழ் சிங்கள முதலாளித்துவ தலைமைகள் தங்கள் வர்க்க நலன்களைப் பேணுவதற்காக இந்நிலையையுருவாக்கி விட்டார்கள்.

ஆரம்பத்தில் ஈழ கோசமானது வெறும் கூக்குரலாக பாராளுமன்ற நாற்காலிகளைக் கருத்திற்கொண்டு எழுப்பப்பட்டது. இந்தக் கூக்குரலின் பின் ஒடுக்குமுறை மேலும் அதிகரித்தது, ஒடுக்கப்பட்டவர்கள் வெற்றுக் கோஷக்காரர்களின் பின் அணிதிரண்டனர். கால கட்டத்தில் வெற்றுக்கோஷக்காரர்களின் போலிவேஷங்கள் கலைந்தபோது மக்கள் நிர்க்கதியாகின்றனர். இக்கட்டத்தில் பிறிதொரு இயக்கம் தோன்ற வேண்டிய வரலாற்றுத்தேவை உருவாகியது.

தோன்றிய இயக்கம் ஆயுதப்போராட்டத்தில் முழுமையாக நம்பிக்கை வைத்து தியாகமனப்பான்மையுடன் போராட ஆரம்பித்தது. இவ்வியக்கத்தில் நிலவிய வரட்டுத்தனமான பிடிவாதங்களிலும் கொள்கைப்போக்குகளிலும் ஈழப்போராட்டத்திற்கு மக்களை அணிதிரட்ட மீண்டும் ஒரு இயக்கம் தேவைப்பட்டது. இதே வேளை இவ்வமைப்புக்களிலிருந்து சற்று வித்தியாசமான போக்கில் வேறு அமைப்புகளும் கருத்துரீதியாக உருவாகின.

www.tamilarangam.net



ஆரம்பத்தில் ஓரிரு அமைப்புக்கள் பகைமுரண்பாடுகளை வளர்த்துக் கொண்டாலும் ஏனைய அமைப்புக்கள் பொது வேலைத்திட்டங்களில் இணைந்தும் தோழமை ரீதியாகவும் வளர்ந்துவந்தன.

இக்கட்டத்தில் தான் ஈழவரலாற்றில் துர்ச்சம்பவமான மறக்க முடியாத வடுவாக 1983யூலைக் கலவரம் உருவாகியது. இக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் போராட்டம் பற்றிய தெளிவு கொஞ்சமும் இல்லாமல் இயக்கங்களை நாடினர். போராட்டத்தில் அனுபவமேதும் இல்லாத இயக்கங்களும் வந்தவர்களை விடக்கூடாது என்ற போர்வையில் வந்தவர்களைத் தம்முடன் இணைத்துக்கொண்டனர்.

சில இயக்கங்களும் ஆயுத சாகசங்களைக் காட்டி மக்களுக்கு ஒருவித மாயையை ஊட்டின. குறிப்பாக குடாநாட்டுப் பகுதி இளைஞர்கள் இவ்வலைக்குள் விழுந்தனர். இவர்கள் சரியான ஒழுங்குமுறையை எதிர் கொண்டவர்கள் அல்ல. வீராயிச மாயை இவர்களை இயக்கங்களுக்கு இட்டுச்சென்றது. சமுதாயத்தில் போராளிகள் பற்றிய கற்பனவாதமும் ஒருவித அந்தஸ்தும் வளரவே போராளிகள் என்ற பெயரில் உலாவிவர அநேகர் விரும்பினர். இயக்கங்களுக்குள்ளும் இவர்களின் ஆதிக்கம் கூடியது. இவர்களிடம் போராட்டம் பற்றிய தெளிவின்மையும் விடுதலையே இவர்களுக்குத் தேவையில்லாத ஒன்றாகவும் இருந்தபடியால் விடுதலையைநோக்கி வளர்ந்து வந்த இயக்கங்கள் திசைமாறின. பதவிமோகங் கொண்டவர்களும், சுயநலக்காரர்களுக்கும் போராட்டத்தைப் பலவீனப்படுத்தினர். தங்கள் சொந்த நலன்களைப் பேணுவதற்காக தமது இயக்கங்களுக்குள் இயக்க வெறியை வளர்த்தனர். இயக்கங்கள் இணைய முடியாத அளவிற்கு முரன்பாடுகள் முற்றின. உள்ளும் புறமும் அராஜகங்கள் தலைவிரித்தாடின. மக்கள் விரோத செயல்கள் உக்கிரமடைந்தன. இவையெல்லாம் தற்போது நடக்கும் நிகழ்வுகளே.

இக்கட்டத்தில் ஈழமக்கள் ஒரு உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். யார் இந்தப் போராளிகள்? வானத்திலிருந்து குதித்தவர்களா. இல்லை, ஈழமக்களில் ஒரு பகுதியினரே இவர்கள். ஈழமக்களின் தன்மை அதாவது ஒரு பகுதி மக்களின் குணம்சங்களே (சுயநலம், போட்டி. பொறாமை....) இப்போராளிகளினா

www.tamilarangam.net



டாக வெளிப்படுத்துகின்றது. இப்படியான மக்களே இதைப் போராடியும் பெறவேண்டும். போராடுவதைத் தவிர ஈழ மக்களின் விமோசனத்துக்கு வேறுவழியில்லை. ஈழமக்கள் ஒவ்வொருவரும்தம்மைத் தாமே திருந்திக்கொள்ளும் போது தான் சரியான போராளிகள் உருவாகுவார்கள். அதுவரை போராட்டமும் அழிவுகளும் காலவரையின்றி தொடர்வது தவிர்க்கமுடியாதது.

ஈழமக்களும் போராட்டமும் பலவகைப்பட்ட சிக்கல்களுக்குள் சிக்கித்தவித்துக் கொண்டிருந்தாலும் ஈழத்துப் போராட்டமானது முன்னேக்கி நகர்வதை அவதானிக்கமுடிகின்றது.

பிழையான திசைவழியில் செல்லும் இயக்கங்களுக்குள் நடக்கும் உட்கட்சிப்போராட்டங்களும் அராஜகத்தன்மை கொண்ட இயக்கங்களில் இருந்து வெளியேறியவர்கள் தொடர்ந்தும் மோசமான அராஜகங்களுக்கு மத்தியிலும் ஈழப்போராட்டத்தில் நிலையாக நின்று போராடமுற்படுவதும் ஈழப்புகுதிகளில் ஆங்காங்கே அராஜகங்களிற்கெதிராக ஆயுதங்களிற்கு அடிபணியாது மக்கள் கிளர்ந்தெழுவதும் ஈழப்போராட்டத்தில் புதிய நம்பிக்கையும் உத்வேகத்தையும் அளிக்கின்றது.

ஈழப்போராட்டத்தைப் பொறுத்தவரையில் ஈழமக்கள் முன்னொருபோதும் போராட்டம் நடாத்தி அனுபவம் பெற்றவர்கள் அல்ல. பெற்றிருக்கவும் முடியாது. எனவே போராட்டம் நடாத்திச் செல்லும் போது கிடைக்கும் அனுபவங்களை வைத்துக் கொண்டே போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லமுடியும். ஈழ வரலாற்றில் இதுவரை எத்தனையோ இயக்கங்கள் தோன்றிவிட்டாலும் இன்னும் இயக்கங்கள் தோன்ற வேண்டியது வரலாற்றுத் தேவையாயின் அது தவிர்க்கமுடியாதது. மக்களைக்குழப்பாத வகையில் கருத்து ரீதியாக இயக்கங்கள் உருவாகுவது வரவேற்கக்கூடியதே. நூறுமலர்கள் மலரட்டும். ஆயிரம் கருத்துக்கள் முட்டிமோதட்டும். சரியான பாதை புலப்படட்டும்.

— கௌதமன் —

www.tamilarangam.net



# உலக நோக்கு

## ஐஸ்லாந்து:

### அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர்வெறி என்றும் அணையாது.
### அதன் விளைவு றேகன்-கோர்பச்சேவ் உச்சிமாநாடு தோல்வி!



போர் மீது றேகன் கொண்ட தீராத வெறி ஐஸ்லாந்தின் தலைநகரான ரெய்க்ஜாவிக்கில் நடைபெற்ற றேகன்-கோர்பச்சேவ் உச்சிமாநாட்டை தோல்வியில் முடிவடையச் செய்துள்ளது. சர்வதேச சமாதானத்தை நேசிப்பதை நிரூபிக்கும் வகையில் சோவியத் தலைவர் கோர்பச்சேவ் பெருமளவு ஆயுதங்களைக் கட்டுப்படுத்தும் திட்டங்களையும், ஐரோப்பாவில் இருந்து நடுத்தர வீச்சு ஏவுகணைகளை இல்லாதொழிக்கும் திட்டங்களையும் சமர்ப்பித்திருந்தார். சோவியத் தலைவரின் இந்தத் திட்டங்கள் போர்வெறி பிடித்தலையும் ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளுக்கு பெரும் அதிர்ச்சியாகவும் அதே வேளையில் சமாதானத்தை நேசிக்கும் இதர நாடுகளால் வரவேற்கப்பட்டதாகவும் இருந்தது. எங்கே சர்வதேச சமாதான சகவாழ்வு நிலவினால் தனது ஆதிக்கக் கொள்கை அடியோடு அழிந்து விடுமோ என்ற றேகனின் அச்சமும், உடன்படிக்கையை நோக்காகக் கொண்டு உச்சி மாநாட்டுக்கு வராமல் உடைப்பை மாத்திரம் எதிர்நோக்கி வந்த கயமைத்தனமும் 'நட்சத்திரப்போரை' காரணம் காட்டி பேச்சுவார்த்தைகளை முறிவடையச் செய்து விட்டது. மேற்படி உச்சிமாநாட்டில் றேகன் நடந்துகொண்டவிதம் அடுத்த மாநாட்டுக்கான காலத்தைக் கூட தீர்மானிக்கவிடாமல் செய்துவிட்டது. மேற்படி மாநாட்டில் சோவியத் யூனியன் சமர்ப்பித்த திட்டங்களை உலகின் பல நாடுகள் வரவேற்றுள்ள அதே வேளையில் மாநாட்டின் தோல்விகரமான முடிவையிட்டு மனந்தளரவேண்டாம் என்று சோவியத் தலைவர் சோவியத் மக்களுக்கு கூறியுள்ளார். 'நாம் எமது நிலைப்பாட்டை அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றோம். இன்று அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் காலம் அவர்களை எமது நிலையை ஏற்றுக்கொள்ளச் செய்யும்' என்றும் கோர்பச்சேவ் கூறியுள்ளார். அமெரிக்க ஏகாதிபத்தின் உச்சிமாநாட்டு அணுகுமுறையும் கற்பனைக் கனவின் உச்சக்கட்டமான நட்சத்திரப் போர்மீது றேகன் கொண்டகாதலும் ஐரோப்பிய நாட்டு மக்களாலும் உலகின் பல அரசுகளாலும், பத்திரிகைகளாலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

## பிரான்சு:

### சோசலிசக் கட்சியின் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் யார்?

1988-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் பிரெஞ்சு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜனாதிபதி மித்திரோன் சமீபத்தில் அளித்துள்ள

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேட்டியொன்று மேற்படி தேர்தலில் சோசலிசக்கட்சி வேட்பாளர் யார் என்ற கேள்விக்குறியை எழுப்பியுள்ளது. அபிப்பிராய வாக்கெடுப்புக்களின்படி 60% மான மக்களின் ஆதரவை இப்போது பெற்றுள்ள ஜனாதிபதி மித்திரோன், அடுத்த தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லை என்று கூறியுள்ளார். ஆனால் தமது இந்த முடிவை உறுதியாக தெரிவிக்காத அவர் தேர்தலுக்கு இன்னும் 17 மாதங்கள் இருப்பதால் தமது முடிவை மாற்றிக்கொள்ளும் சாத்தியமும் இருக்கிறது என்றும் கூறியுள்ளார். அதே சமயம் சோசலிசக் கட்சியின் வேட்பாளராக மிசேல்ரொக்கார் தன்னை அறிவித்துள்ளார். இவருக்கான மக்களின் அபிப்பிராய ஆதரவும் அமோகமாகவுள்ளது. சோசலிசக் கட்சியின் பொதுக்காரியதரிசி லயனல் ஜோசபின், முன்னாள் பிரதமர் லோறன் பபூஸ் ஆகியோரும் தமது வேட்புக்களை அறிவிக்கும் சாத்தியம் இருக்கிறது.

அதேசமயம் வலதுசாரி எதிர்க்கட்சிகளிடையே ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தொடர்ந்தும் இழுபறி நிலையே இருந்து வருகிறது. பிரதமர் ஜாக் சிராக்கின் வேட்பு நிச்சயிக்கப்பட்டுவிட்ட அதேவேளையில் அவரது அரச கூட்டணியினரான ஹிஸ்கார்ட், றேமண்ட்பார் ஆகியோரும் போட்டியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நிக்கராகுவா:

## அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முகமூடி கிழிகிறது! நிக்கராகுவாவினுள் அமெரிக்க விமானம் சுட்டுவீழ்த்தப் -பட்டது!



நிக்கராகுவா என்ற சிறு புரட்சிமலரை நசித்து நாசம் செய்வது என்பது நவபாசிச அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நெடுநாளைய திட்டம். தன்திட்டத்தை தனது நாசகாரக் கும்பலான சி.ஐ.ஏ மூலமும் அதன் கைக்கூலிகளான கொன்றாஸ் எனப்படும் கொலைக் கும்பல் மூலமும் றேகன் நிர்வாகம் செயற்படுத்தி வருகிறது. ஆனால் இது தொடர்பாக குற்றச் சாட்டுக்கள் எழுந்த போதெல்லாம் தான் நிக்கராகுவா பிரச்சினையில் நேரடியாகத் தலையிடவில்லை என்று பொய்கூறி றேகன் நிர்வாகம் தப்பித்து வந்தது. ஆனால் இப்போது இந்த வெறிபிடித்த கும்பலின் முகமூடி கிழிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நிக்கராகுவாவின் வானப்பிராந்தியத்தில் வைத்து நிக்கராகுவாவின் விடுதலைப்படைவீரன் ஒருவனால் அமெரிக்க C-123 K விமானம் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது. சி.ஐ.ஏ.யின் கூலிப்படைகளுக்கு ஆயுத விநியோகம் செய்யும் இவ்விமானத்திலிருந்த 3 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டதுடன் ஹசென்பஸ் என்பவன் உயிருடன் பிடிக்கப்பட்டும் உள்ளான். இவன் அளித்த சாட்சியங்களும், கைப்பற்றப்பட்ட ஆதாரங்களும் மேற்படி சுட்டுவீழ்த்தப்பட்ட விமானம் சி.ஐ.ஏ யினால் எல்சல்வடோரின் இலப்பன்கோ விமானத்தளத்திலிருந்து கொன்றாசுக்கு ஆயுதம் வழங்க அனுப்பப்பட்டது என்றும் தான் உட்பட விமானத்திலிருந்த அனைவரும் சி.ஐ.ஏ முகவர்களே என்றும் தெரியப்படுத்தி உள்ளான். அத்துடன் இவர்களுக்கும், றேகன் நிர்வாக உயர்மட்டத்தினருக்கும் உள்ள தொடர்புகளும் அம்பலமாகியுள்ளது. அமெரிக்க மக்களுக்கு, மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்மையை மறைத்து மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக றேகன் நிர்வாகம் செய்து வரும்

www.tamilarangam.net



இந்த நீசச் செயல் தற்போது அமெரிக்காவில் வன்மையாக கண்டிக்கப்படுவ. நகிறது. விரைவில் நிக்கராகுவாவினுள் அமெரிக்க ஏகாதிபத்தியம் நேரடியாக கவே தலையிடும் நிலைவரலாம் என்பதற்கான அறிகுறியாகவும் இது கருதப்படு கிறது.

## மொஸாம்பிக்:

### மொஸாம்பிக் ஜனாதிபதி சமோரா மாஷல் மரணம் பின்னணியில் தென்னாபிரிக்க நிறவெறியரசின் நீசக்கரங்கள்:

மொஸாம்பிக் ஜனாதிபதி சமோரா மாஷல், சில அமைச்சர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் பயணம் செய்த விமானம் ஒன்று தென்னாபிரிக்க எல்லைக்குள் விபத்துக்குள்ளாகி சமோரா மாஷல் உட்பட பலர் மரணமடைந்துள்ளனர். இந்த விபத்தின் பின்னணியில் தென்னாபிரிக்க நிறவெறியரசும், அவர்களது கைக்கூலிக் கும்பல்களான மொஸாம்பிக் எதிர்ப்புரட்சிக் கும்பலும் (RENAMO) இருப்பதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ், மொஸாம்பிக் அரசு உட்பட பல ஆபிரிக்க நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. புவியியல் ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் மொஸாம்பிக் பெற்றுள்ள முக்கியத்துவம், ஜனாதிபதி சமோரா மாஷலின் மார்க்ஸிய-லெனினிய நிலைப்பாடு, தென்னாபிரிக்க அரசின் அச்சுறுத்தல்களையும் மீறி ஆபிரிக்க தேசிய காங்கிரஸிற்கு மொஸாம்பிக் அரசு வழங்கும் ஆதரவு ஆகிய காரணங்களை மையமாகக் கொண்டு சமோரா மாஷலைக் கொலை செய்வதன் மூலம் மொஸாம்பிக் ஆட்சியைச் சீர்குலைத்து தனது கைக்கூலிகளை ஆட்சிக்குக் கொண்டு வரலாம் என்ற தென்னாபிரிக்க அரசின் கேவலமான சதி முயற்சியே இப்படுகொலைகள். ஆபிரிக்க நாடுகள் எங்கும் தென்னாபிரிக்காவின் இந்த மிருகத்தனமான படுகொலைகளுக்கெதிராக ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

## செய்திகள்:

* பிரித்தானியாவிலும், ஐரோப்பாவின் இதர பாகங்களிலும் நடந்த பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் சிரியாவிற்கும் தொடர்புண்டு எனக்கூறி சிரியாவுடனான தனது இராஜதந்திர உறவுகளை பிரித்தானியா முறித்துள்ளது.
* எதிர்க்கட்சிகளுக்கெதிரான தடைவிதிப்பு, மக்களின் ஜனநாயக சுதந்திரத்திற்கு சீல்வைப்பு. 75% மான மக்களின் தேர்தல் பகிஷ்கரிப்பு. இவற்றிற்கிடையே நடந்த ஏமாற்று வித்தையாகிய வங்காள தேச ஜனாதிபதித் தேர்தல் ஊழல் நாடகத்தில் தாமே வெற்றி பெற்றுள்ளதாக வங்காளதேச முன்னாள் இராணுவ அடக்குமுறை ஆட்சியாளன் எர்சாட் அறிவித்துள்ளான்.
* லிபியாவை அமெரிக்கா கொடுமைப்படுத்தினால் அமெரிக்காவுக்கெதிரான பயங்கரவாதத்தை லிபியா நேரடியாகவே பிரயோகிக்கும் என லிபியத்தலைவர் கடாபி கூறியுள்ளார்.
* பிரித்தானியாவிலுள்ள அமெரிக்க அணுத்தளங்களை மூடுவதற்கான தீர்மானமும், அணு ஆயுதங்களைத் தடை செய்வதற்கான தீர்மானமும், நிக்கராகுவா மீது அமெரிக்கா நடந்து கொள்ளும் முறையைக் கண்டிக்கும் தீர்மானமும் அடுத்த பிரித்தானிய தேர்தலில் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தைப் பெற்றுள்ள தொழிற்கட்சி மாநாட்டில் எடுக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net

## ✱ சிறைகள் பாடின:

"இரவுக்கு நிலவில்லை
நிலவுக்கு ஒளியில்லை
ஒளியையும் கருங்கற் சுவர்கள்
முறிக்கின்றன"

வதை கூட அறைகளுக்குள் பாடல் இல்லை,
ஒலி மட்டும் தனித்து அலைகிறது

ஒலி, எதிரொலி, ஒலி
என
தெறித்து முறிந்து
சிதறிப் பரவும் ஒலி
எதிரொலி

இரும்பின் கரங்களும்
நொருங்கித் தகர
சிறையிருளில்
உயிர்த்திரி உருக
எழுகிறது தீபம்

வீழ்ந்தவர்கள் விதையாகி
விதை முளைத்து மரமாகி
விழுது விட,
வபவாறு கண் மலரும்

அகாதத்திலிருந்து வரும்
ஒரு செய்திக்காகக்
கூண்டுகளுக்குள்
அவர்கள் இன்னும் காத்திருக்கிறார்கள்:

விடுதலை

லங்கா வதைமுகாம்களில்
ண்ணாவிரதப் போராட்டம்
த்திய எமது
ன்னதமான
ரழர்களுக்காக....

சரண்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடைசிப்பக்கம்

தேவராணி

நிகழ்காலம் மிகக் கொடூரமானது. எங்கள் தாயகத்தில் அழிவுகள்..எரிவுகள். இந்தக் கொடுமையிலும், அழிவிலும், அழியாமல் எரியாமல் வாழ்கின்றோம் என்பதை எங்கள் இலக்கியங்கள் சொல்கின்றது – தமிழகத்து இலக்கிய படைப்பாளிகளே இன்றைய ஈழத்து இலக்கியங்களை ஓகோ எனப்புகழ்கின்றனர்.

பிரான்சில் வாழும் ஈழத்தமிழர்கள் இக்காலகட்டத்தில் இலக்கியத்தில் ஏதாவது செய்தார்களா?

கடந்த ஐந்து வருடங்கள் ஈழத்தமிழ் தேசிய இனத்தின் மீதான அடக்குமுறைகள் ஆகக்கொடுரமான காலங்கள் – இதே வயது தமிழ்முரசிற்கும். ஐந்து வருடங்கள் 60 புத்தகங்கள். ஒன்றுகூட தவறாமல் மாதத்தின் முற்பகுதியில் வாசகர்களுக்கு கிடைத்துவிடும் வகையில் ஒழுங்காக வருகின்றது. இந்தத் தமிழ்முரசின் தோற்றத்திற்கு காரணம் என்ன?

பெரிய பிரித்தானியாவுக்கு அடுத்து ஈழத்தமிழர் பெருவாரியாக வாழும் ஐரோப்பிய நாடு பிரான்ஸ். ஈழத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்வேறு வர்க்கத்தட்டுகளில் இருந்தும் குறுகிய காலத்தில் பெரும் எடுப்பில் குடிபெயர்ந்து பிரான்சுக்கு வந்த தமிழர், இலங்கையில் அரசியல் இராணுவக் கொடுமைகளை நேரடியாக அனுபவித்தவர்கள் – இவர்களுடைய வர்க்ககுணமும் சமும் தேசப்பற்றும் தங்கள் முகங்களை இழக்கவிரும்பாமல் வாழும் ஆசையுமே, தமிழ்முரசின் தோற்றத்திற்கு காரணமென என் கணிப்பு.

"மணிக்கொடி" "எழுத்து" 'வானம்பாடி' என்ற இலக்கிய சஞ்சிகைகளைச் சொன்னால் அதன் காலம் அதுஉருவாக்கிய படைப்பாளிகள் அது இலக்கியத்துக்கு செய்த பணி இவைகள் ஞாபகத்திற்கு வரும். அந்தளவு சிறப்பு அந்தளவு இலக்கிய பணி இந்த ஐந்து வருடத்தில் தமிழ்முரசிற்கு இல்லவே இல்லை. இது ஒரு அரசியல் சஞ்சிகை. கால தேச சூழ்நிலையால் அரசியல் இயக்க சார்பு எடுத்தது. அரசியல் புயலில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அகப்பட்ட சஞ்சிகை ஆனாலும் இந்த காலத்தில் ஆற்றிய சிறிய இலக்கியத்திற்கான பதிவுகளை நினைக்கத்தான் வேண்டும்.

தமிழில் கவிதை கட்டுரை எழுதிய மோகன் இன்று பிரன்சு மொழியில் மிக அழகாக கவிதைகள் எழுதுகின்றார் என்றால் அல்லது அருந்ததி, செல்வம் போன்றோரின் கவிதைகளில் மெருகு ஏறியிருக்கின்றது என்றால் அது தமிழ்முரசின் இலக்கியப் பக்கங்களே என்பதை இதை எழுதிக்கொண்டு இருக்கும் நானோ வாசித்துக்கொண்டிருக்கும் நீங்களோ மறுக்கமுடியாது.

ஈழத்தில் அல்லது தமிழ்நாட்டில் வெளிவரும் ஈழத்து படைப்புக்களை மறுபிரசுரம் செய்து தமிழ்முரசு தன் இலக்கியப் பக்கங்களை நிரப்பும் பரிதாபம் ஏன்? இந்த மறுபிரசுரங்கள் தேவைதான். ஆனால், 15ஆயிரத்துக்கு மேல் பிரான்சில் வாழும் தமிழர்களில் அல்லது ஐரோப்பாவில் வாழும் ஏனைய தமிழர்களில் படைப்பாளிகள் இல்லையா? இங்கு இருந்து எமது தாயகத்தைப் பார்க்கும் பார்வைகள், இங்குள்ள அனுபவங்கள் இலக்கியமாக வரவேண்டும். இதுதான் காலங்களை கடந்து எமது வரலாற்றைச் சொல்லும்.

இலக்கிய பக்கங்களை குறைவாகவும் அரசியல் செய்திகளை கட்டுரைகளை, பல பக்கங்களிலும் வெளியிடும் முரசு ஆசிரியருக்கு, "சேரன்" "மரணத்துள் வாழ்வோம்" நூலுக்கு எழுதிய முன்னுரையின்ஒரு பகுதியை சொல்லலாம் என எண்ணுகின்றேன்.

"வரலாற்று இயக்கத்தில் சமூக அரசியல் கருத்தமைவுகளும் கட்டமைப்புக்களும் மாற்றமுற்றுவரும். ஆனால், இத்தகைய காலக்கட்டங்களில் எழுந்த கலைப்படைப்புக்கள் சமூக அரசியல் கட்டமைப்பு மாற்றங்களை மீறிநிற்கும். அரசியலும் நிகழ்ச்சிகளும் வரலாற்று புத்தகங்களிலும் ஆவணக்காப்புக்களிலும் புதைந்து கொள்ள கலைப்படைப்புக்கள் என்றென்றைக்குமாக மக்களோடு இன்னுமெல்ல வாழ்ந்து கொண்டு இருக்கும்"

இலக்கியத்திற்கான பக்கங்களை கூட்டவேண்டும். இங்குள்ள யதார்த்தங்களை அனுபவங்களை படைப்புக்களாக கொண்டு வர படைப்பாளிகளை ஊக்குவிக்கவேண்டும்.

www.tamilarangam.net



முரசு ஆசிரியரை ஒன்றுக்குப் பாராட்டலாம். சஞ்சிகையும் தானும் ஒரு இயக்க சார்பாக இருந்தாலும் எழுத்தாற்றல் உள்ள யாரையும் (நான் அறிந்தளவில்) ஊக்குவிப்பதும் படைப்புகளைப் பிரசுரிப்பதும் இது நாளைக்கு தமிழ்முரசை நல்ல இலக்கிய சஞ்சிகையாக வளர்த்தெடுக்கும் என எண்ணுகின்றேன். முரசின் இன்னொரு சிறப்பம்சம் அதில் வரையப்படும் சித்திரங்கள் மிக அருமையாக அண்மைக்காலத்தில் வளர்ச்சியடைந்து இருக்கின்றன.

மனுக்குலத்தின் அனுபவங்கள் இலக்கியமாகின்றது. சமூக அரசியல் பொருளாதார பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கும் மானிடம் தன் அனுபவங்களை இலக்கியமாக்கின்றது. அகதிகளாக வெளியேற்றப்பட்ட அல்லது வெளியேறிய நாங்கள் படைக்கும் இலக்கியங்களே நாளைக்கு எங்கள் பதிவுகளை இங்கு விட்டு வைக்கப் போகின்றது. பிரான்சின் கலை இலக்கியங்கள் உன்னதமானவை. கலைகளினதும் கலைஞர்களினதும் தாயகம் பாரிஸ் என்பார்கள். மாப்சானையும் விக்டர் கியூக் கோவையும், அனத்தே அலெக்ஸ்சாண்டுமாசையும் பெற்ற பிரான்ஸ் நாட்டில் நாங்களும் வாழ்ந்தோம் என ஒரு காலத்தில் பெருமைப்படுவோம். ஆனால் இன்று ஏதாவது நாங்களும் படைப்போம். இதற்காக முரசு தன்பங்கைச் செய்ய வேண்டும்.

இருநூறு ஆண்டு காலம் தமிழ்நாட்டு பாண்டிச்சேரி மக்களுக்கும் பிரான்ஸ் மக்களுக்கும் தொடர்பு உண்டு. அவர்களில் பிரான்சும் தமிழும் கற்றவர்கள் பலர் உண்டு. அவர்கள் பெரிதாக எந்த இலக்கிய பணியும் செய்யவில்லை. ஆனால் ஈழத்தமிழராகிய நாம் கட்டாயம் அவர்கள் போல் ஏதாவது செய்யாமல் போகமாட்டோம். இதற்கு தமிழ் முரசு சான்று.

**************************************************

**தோழர்களே!**

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிராக்சுப் பிரிவுடனான உங்கள் அனைத்துத் தொடர்புகளுக்கும்............,

**EELAM PEOPLE'S INFORMATION CENTRE**
**[Epic - France Branch]**
10, Rue des Martyrs — 75009 PARIS
**France**

தொலைபேசித் தொடர்பு இல.- 48 74 98 30.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒவ்வொரு வாரமும்
சனி, செவ்வாய் ஆகிய
இரு தினங்களிலும்
F.M 105.25 MHS
அலை வரிசைகளில்
இரவு 9.00 மணி
தொடக்கம் 10.00
மணி வரையும்
கேட்கலாம்.

EPPLF இன்

# ஈழ வானொலி


# சங்கே முழங்கு

எதிர் வரும்
23.11.86 ஞாயிறு மாலை
5.00 மணிக்கு நடைபெறும்
நிகழ்ச்சி மண்டபம்
LE GRAND EDGAR.
6, RUE DE LA GAITÉ
PARIS
Ⓜ EDGAR QUINET
DIRECTION: NATION-CH,DE.G ETOILE.

தொடர்புகட்கு: **EPIC** 10, RUE DES MARTYRS
PARIS 9.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளியீடு! ஈ.ழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்